பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 30 வெள்ளிக்கிழமை (13.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :168



பேரணி நல்லூரிலிருந்து புறப்படுகின்றது. (படம்: பிரபா)

## நல்லூரில் நேற்று மாணவர்கள் பேரணி

யாழ்ப்பாணம்,மே13

மட்டக்களப்பு - சந்திவெளியில் ஜனநாயக ரீதியில் போராட்டம் நடத்திய அப்பாவிப் பொது மக்கள் மீது அரசபடைகள் மேற்கொண்ட அராஜகத்தை வன்மையாகக் கண்டித்து குடாநாட்டு மாணவர்கள் ஒன்றுதிரண்டு நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பேரணி, காலை 10மணியளவில் நல்லூர்க்கந்தன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. அரசிற்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு கோவில் வீதியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தை அடைந்தது பேரணி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மா.க.ஈழவேந்தன், கி.சிவனேசன் ஆகியோரும் பேரணியில் கலந்துகொண்டனர். கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், கி.சிவநேசன் மற்றும் அகில உலக சைவக்குருமார் சம்மேளனப் பீடாதிபதி சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர் ஆகியோர் அரசின் அராஜகத்தைக் கண்டித்து கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் அரிபெர்க்காவிடம் யாழ்.மாவட்ட மாணவ ஒன்றியத் தலைவர் குணேந்திரன், யாழ். பல்கலைக்கழக மாணவ

(16ஆம் பக்கம் பார்க்க)

# இணக்கம் காணப்படாத பல விடயங்கள் இன்னும் பொதுக்கட்டமைப்பில் உள்ளன!

## அதற்கு முன்னர் உடன்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்கின்றனர் புலிகள்

கிளிநொச்சி,மே13

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்படாத பல விடயங்கள் இன்னும் உள்ளன. அதற்கிடையில் ஓரிரு தினங்களில் பொதுக்கட்டமைப்பு உருவாகிவிடும் என்று கூறுவதில் அர்த்தமில்லை. எல்லா விடயங்களிலும் உடன்பாடு எட்டப்பட்டு ஒப்பந்தம் உடனடியாக ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி நடப்பதற்கு வாய்ப்பேயில்லை. - இவ்வாறு விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.**

பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தம் எந்நேரத்திலும் கைச்சாத்தாகலாம் என்றும் -

அடுத்த ஓரிரு தினங்களுள் உடன்பாடு எட்டப்பட்டுவிடும் என்றும் -

தென்னிலங்கையில் செய்திகள் கசியும் சூழ்நிலையில், அதுகுறித்துக் கேட்டபோதே புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன.

துறைமுகங்கள், இறங்குதுறைகள் மறுசீரமைப்பு, கடல் அள்ளிச்சென்ற பொருள்களை வெளியே எடுத்து கரையோரங்களைத் துப்புரவு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதர் நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்.மே13

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுக் காலை யாழ். குடாநாட்டிற்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கெண்டார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வருகை தந்த இவர் கோயில் வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்துக்குச் சென்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



படகுப் புனரமைப்புப் பணியை நோர்வேத் தூதர் பார்வையிடுகிறார். (படம்: சி.சுந்தரலிங்கம்)

## அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பு கண்டிக் கூட்டத்தில் வெளியிடப்படும்?

கொழும்பு,மே13

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவிருப்பது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் கண்டியில் நடைபெறும் உதவும் நாடுகளின் கூட்டத்தில் வைத்து அரசினால் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் கண்டியில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள சூழ்நிலையில் உத்தேசப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி வாகனம் மீது தாக்குதல்

ஏறாவூர்,மே13

மட்டு.-வாழைச்சேனை,பிரதான வீதியில் வைத்து ஈ.பி.டி.பி இயக்க முக்கியஸ்தர்கள் பயணஞ்செய்த வாகனம்மீது நேற்று நண்பகல் இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது ஈ.பி.டி.பி. இயக்க முக்கியஸ்தர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிச்சென்ற நான்கு பொலீஸ் உத்தியோகத்தர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரான சிவானந்தராஜாவும் அவரது குழுவினரும், மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனையில் உள்ள தமது அலுவலகத்துக்குச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனை நோர்வேத் தூதர் இன்று சந்திப்பார்

கொழும்பு.மே13

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை அரசும், புலிகளும் சேர்ந்து எந்தச் சமயத்திலும் உருவாக்கலாம் என்ற செய்திகள் அடிபடும் பின்ன

(16ஆம் பக்கம் பார்க்க)

## இருபதாயிரம் கோடி ரூபாவை அரசு கண்டிக் கூட்டத்தில் எதிர்பார்க்கிறது

கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகள் அமைப்பின் மாநாட்டின்மூலம் இருபதாயிரம் கோடி ரூபாவை அரசு எதிர்பார்ப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

நிதியமைச்சில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு உதவும் நாடுகள் அமைப்பின் இரண்டுநாள் மாநாடு கண்டியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இந்த மாநாட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரம்பித்து வைப்பார்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமுடன் நேற்று அகாஷி பேச்சு

கொழும்பு,மே13

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஹோட்டல் ஹில்டனில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டிருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு குறித்தான தமது கட்சியின் நிலைப்பாட்டை அகாஷியிடம் விளக்கிய ரவூப் ஹக்கீம், இந்த முயற்சிகளில் ஆரம்பம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக் குறித்து புலிகள் முஸ்லிம்களுடன் பேசுவதற்குத் தயார்!

### அதற்குமுன் ஜனாதிபதியின் முடிவு அவசியம் என்கிறார் தமிழ்ச்செல்வன்

கொழும்பு,மே13

பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாக திட்டவட்டமான அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி குமாரதுங்க விடுப்பாரானால், நாம் அந்தக் கட்டமைப்புக் குறித்து முஸ்லிம்கள் தரப்போடு பேசலாம். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக முஸ்லிம்களுக்கு உள்ள சந்தேகங்களைக் களைந்து, அவர்களையும் எம்முடன் இணைத்து மீள் கட்டமைப்பு விடயத்தை முன்னெடுத்துச் செல்ல நாம் தயாராக இருக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் அழுத்தத்தையும் தூக்கிக் கடாசியது ஜே.வி.பி.!

### அகாஷிக்கு முகத்தில் அடித்தாற்போல் பதில்

கொழும்பு,மே13

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் ஜப்பானிய அரசினால் வழங்கப்பட்ட அழுத்தத்தினையும் ஜே.வி.பி. புறக்கணித்து தூக்கி எறிந்து விட்டது.

எந்த விடயத்திற்கும் ஜே.வி.பி.உடன்படும். ஆனால், இந்த பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி.தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது - என்று இலங்கை அமைதி முயற்சிகளுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



மட்டு. சந்திவெளிப் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நல்லூரில் நேற்று நடைபெற்ற பேரணியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கூட்டமைப்பு எம்.பிக்களான மா.க.ஈழவேந்தன், சிவநேசன் ஆகியோர் பேரணிக்குத் தலைமைவகித்துச் செல்வதை முதலாவது படத்தில் காணலாம்.
பேரணியில் கலந்துகொண்ட மாணவர்களுள் ஒரு பகுதியினரையும், பேரணியின் இறுதியில் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிக்கு மகஜர் கையளிக்கப்படுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா, கவிதரன்)

### ராஜீவ், பத்மநாபா கொலை வழக்கில்

# சென்னை மேல் நீதிமன்றத்தில் விடுவிக்கப்பட்ட அரியாலை இளைஞனுக்கு கொழும்பில் ஆபத்து

## மனித உரிமைக்குழுவிடம் உதவிகோருகிறார் சகோதரி

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் கே.பத்மநாபா ஆகியோரது கொலைக் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் இருவரில் ஒருவர் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த எஸ்.வசந்தகுமார். விடுதலையான வசந்தகுமார் தாயகம் திரும்புவதற்குத் தயாரானார். ஆனால் இலங்கையில் அவர் வந்திறங்கியதும் அவரைக் கைது செய்யப் போவதாக ஸ்ரீலங்காப் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர். அதனால் வசந்தகுமார் நாடு திரும்பாமல் இந்தியாவிலேயே தங்கியிருக்கிறார்.

எனவே தனது சகோதரனைப் பாதுகாப்பாக யாழ்ப்பாணம் அழைத்து வருவதற்கு உதவுமாறு இங்குள்ள அவரது சகோதரி மனித உரிமை ஆணைக்குழுவிடம் கேட்டிருக்கின்றார்.

1990இல் இடம் பெற்ற பத்மநாபா கொலை மற்றும் 1991இல் இடம்பெற்ற ராஜீவ்காந்தி கொலை என்பவற்றில் வசந்தகுமாரும், லிங்கன் என்பவரும் குற்றஞ்சாட்டப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், இவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கான ஆதாரங்கள் இல்லாத நிலையில் கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை சென்னை மேல் நீதிமன்றம் இவர்களை விடுவித்ததுடன் தாயகம் திரும்புவதற்கான அனுமதியையும் வழங்கியது.

இந்த நிலையில் இவ்விருவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடையும் பட்சத்தில் இவர்களிருவரையும் இலங்கைப் பொலீஸார் கைதுசெய்யத்திட்டமிட்டிருக்கின்றனர் என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த எஸ்.வசந்தகுமார் என்பவரை யாழ்ப்பாணத்துக்கு பத்திரமாக அழைத்து வருவதற்கு அவரது சகோதரி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் உதவியைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவரின் சகோதரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளார். (த-7)

## பிரதமர் தலைமையில் இன்று முக்கிய கூட்டம்

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புக் குறித்து உறுதியான தீர்மானங்களை எடுப்பதற்கான மிக முக்கியமான பேச்சுகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெறவுள்ளன.

அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுக்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளும், இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பில் இழுபறியான நிலைமை தொடர்ந்து நீடிக்கும் சூழ்நிலையில், இன்றைய பேச்சுகளின்போது இவ்விடயத்துக்கு ஓர் இறுதி முடிவு காணப்படுமென்று அலரிமாளிகை வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முக்கிய பேச்சுகளை நடத்தியுள்ளார். நாட்டின் சமாதான முயற்சிகள், பொருளாதார நிலைமை ஆகியன குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் பிரதமர் பேச்சுகளை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-க-12)



ரெலிக்கொம்மின் தொலைபேசி விவரக்கொத்து வெளியிடும் நிகழ்வு நேற்றிரவு யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள பிள்ளையார் 'இன்' விடுதியில் நடைபெற்றது. வடபிராந்திய பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் வாடிக்கையாளர் ஒருவருக்கு முதற்பிரதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: பிரபா)

# இன்று கல்லெறியும் நம் கைகள் நாளை உன் மீது குண்டெறியும்!

## நேற்றைய பேரணியில் மாணவர்கள் உணர்ச்சிக் கோஷம்

யாழ்ப்பாணம்,மே13

மட்டக்களப்பு சந்திவெளியில் ஸ்ரீலங்காப் படைகள், பொதுமக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டிக்கும் முகமாக நேற்று குடாநாட்டு மாணவர்கள் நடத்திய பேரணியில் அரசின் அராஜகப் போக்கினைக் கண்டித்து பல்வேறு கோஷங்கள் உரத்து ஒலிக்கப்பட்டன.

மாணவர்கள் உணர்வு மேலீட்டில் அங்கு எழுப்பிய கோஷங்கள் சில வருமாறு:-

★ இன்று கல்லெறிகின்ற எமது கைகள் நாளை உன் மீது குண்டு வீசும்.

★ வெளியேறு இராணுவமே!

★ இன்று அமைதி ஊர்வலம் நாளை துப்பாக்கி ஊர்வலம்.

★ சிங்கள அரசே உன் சின்னத்தனமான யுத்தத்தைக் கைவிட்டு முடிந்தால் பெரும் யுத்தத்துக்கு வா...

★ இன்று பள்ளிச் சீருடையில் ஊர்வலம் நாளை புலிச்சீருடையில் ஊர்வலம்.

★ பேனா ஏந்தும் கைகள் நாளை துப்பாக்கி ஏந்தும் நிலை உருவாகும். (த-13-7-88-111-86-31-84)

# ஊர்காவற்றுறையில் இன்று கலை, இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 13

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் நடத்தப்படவுள்ள கலை, இலக்கியப் போட்டிகள் இன்று காலை 9 மணிமுதல் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கட்டுரைப்போட்டி காலை 9.30 மணிக்கும், கவிதைப்போட்டி முற்பகல் 11 மணிக்கும், சிறுகதைப்போட்டி 12 மணிக்கும், சித்திரப் போட்டி பிற்பகல் ஒரு மணிக்கும் நடைபெறும்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள் இந்தப் போட்டிகளில் பங்குகொள்கின்றனர் என்றும் -

இந்தப் போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்குரிய பரிசில்கள், சான்றிதழ்கள் பணிமனையினால் விரைவில் நடத்தப்படவுள்ள கலை, இலக்கியப் பெருவிழாவன்று வழங்கப்படும் என்றும் - தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நாட்டுப்புறப்பாடல் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (எ)

# அறுவைச் சிகிச்சை நிபுணர் சங்கத்தின் அனுசரணையில் மருத்துவக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே13

இலங்கை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கமும், யாழ்.மருத்துவ சங்கமும் இணைந்து மருத்துவக்கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளன. இந்தக்கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முதல் தினமும் காலை 8மணி முதல் 12 மணிவரை யாழ். லொயலாஸ் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும். மேற்படி கருத்தரங்கில் கருத்துரை வழங்குவதற்கென கொழும்பிலிருந்து 20 சத்திர சிகிச்சை நிபுணர்கள் கொண்ட குழுவொன்றும், 46பேர் கொண்ட மருத்துவக் குழுவொன்றும் விமானம் மூலம் இன்று யாழ். வருகைதரவுள்ளது.

இந்தக் குழுவில் வெவ்வேறு துறைசார்ந்த இருபதுக்கும் மேற்பட்ட சத்திரசிகிச்சை நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் தத்தமது துறைகள் தொடர்பான கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளனர். இந்தக்கருத்தரங்கில் வைத்தியர்களையும் மருத்துவ பீட மாணவர்களையும் பங்குகொண்டு பயன்பெறுமாறு அதன் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-13)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவையொட்டி ஏற்பாடுசெய்யப்பட்ட கல்விக் கண்காட்சி நேற்று வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கண்காட்சியை நாடாவெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்தில் காணலாம். யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன், கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த யோ.ஜெயக்குமார் ஆகியோர் இந்தப் படத்தில் உள்ளனர். தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், யாழ். மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் ஆகியோர் மங்களவிளக்கேற்றுவதையும் கண்காட்சியைப் பார்வையிட்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: நா.தங்கவேல் - சாவகச்சேரிச் [illegible])

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் 16ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டம் - ஆண்கள், 16ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம், 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

**உதைபந்தாட்டம் - பெண்கள்:** 30ஆம், 31ஆம் திகதிகளில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

**எல்லே - ஆண்கள் :** 21ஆம், 22ஆம் திகதிகளில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

**எல்லே - பெண்கள் :** 24ஆம் திகதி கரவெட்டி மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

**கரபந்தாட்டம் - ஆண்/பெண்:** 15ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

**கபடி - ஆண்/பெண்:** 28ஆம், 29ஆம் திகதிகளில் நெடுந்தீவு விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

**வலைப்பந்தாட்டம் - பெண்கள் :** 23ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

**துடுப்பாட்டம் - பெண்கள்:** ஜூன் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் நடைபெறும்.

**துடுப்பாட்டம் - ஆண்கள் :** ஜூன் மாதம் 18ஆம், 19ஆம் திகதிகளில் மல்லாகம் ஆர்.டி.எஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (8-190)

# கூடைப்பந்தாட்டச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல.1, பிறவுண் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின தொடர்பகத்தில் இடம்பெறவுள்ளது.

பதிவு செய்த கழகங்கள் 2005ஆம் ஆண்டிற்கான அங்கத்துவ பணத்தினை செலுத்தி தங்கள் கழகம் சார்ந்த இரண்டு பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை மேற்படி முகவரிக்கு நாளை சனிக்கிழமைக்கு முன் அனுப்பி வைக்குமாறு செயலாளர் சூ.அகிலன் கேட்டுள்ளார். (8-190)



வடமாகாண மதுவரி உத்தியோகத்தர் விளையாட்டுக் கழகத்தினர் யாழ். மாவட்ட திணைக்களங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய யாழ். போதனா வைத்தியசாலை அணியினரைப் படத்தில் காணலாம். (8-190)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,மே13

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் மின்னொளி உதைபந்தாட்டப் போட்டியில் இன்று கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

**காட்சி உதைபந்தாட்டம்**

சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்

**பெண்கள் உதைபந்தாட்டம்**

பருத்தித்துறை லீக் பெண்கள் உதைபந்தாட்ட அணி எதிர் யாழ்ப்பாணம் லீக் பெண்கள் உதைபந்தாட்ட அணி.

எல்லைப்படை மாவீரர் நினைவாக இடம்பெற்ற போட்டியின் 3ஆம் இடத்திற்கான ஆட்டமும் இடம்பெறவுள்ளது. (8-86)

விளையாட்டு

# வை.எம்.சி.ஏயின் மேசைப்பந்தாட்ட போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே13

யாழ். வை.எம்.சி.ஏ. வருடாவருடம் அங்கத்தவர்களுக்கு இடையில் நடத்திய மேசைப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

**ஒற்றையர் ஆட்டம் - ஆண்கள்**

பி.ஜெயதாஸ், ஜெ.மோகன்.

**திறந்த ஒற்றையர் ஆட்டம் - பெண்**

திருமதி எம்.என்.கரிகரன், எஸ்.சிறி மைதிலி.

**இரட்டையர் ஆட்டம் - பெண்**

எம்.என்.கரிகரன் - எஸ்.சிறிமைதிலி, எ.நிருசியா - ஆர்.யசோதா.

**ஒற்றையர் ஆட்டம் - 18வயதுப் பெண்கள்**

எ.நிருசியா, எஸ்.கஜனி.

**ஒற்றையர் ஆட்டம் - 18 வயது ஆண்கள்**

ரி.மயூரதன், என்.யுனேந்திரா.

**இரட்டையர் ஆட்டம் - 18 வயது ஆண்கள்**

பி.மயூரதன் - என்.யுனேந்திரா, எஸ்.ஜனகன் - பி.கஜரூபன்.

**ஒற்றையர் ஆட்டம் - 16 வயது ஆண்கள்**

கே.சாமிலன், என்.சனேந்திரா

**இரட்டையர் ஆட்டம் - 16 வயது ஆண்கள்**

என்.சனேந்திரா - கே.சாமிலன்

ஐ.ஜே.மரினோ - ஜே.ஏ.ஜி.கிருஷாந்த்

**ஒற்றையர் ஆட்டம் - 14 வயது ஆண்கள்**

எம்.அமில்தன், ரி.நிஸ்ஷந்தன்.

**ஒற்றையர் ஆட்டம் - 12 வயது ஆண்கள்**

எஸ்.சேலெமன், ரி.சுஜீவன்.

**ஒற்றையர் ஆட்டம் -10 வயது ஆண்கள்**

எம்.ஆகாஷன், யூ.தனுஷனன்.

**கலப்பு ஆட்டம்**

ஆர்.எவ்.ஜோனதீதன் - எ.நிருஷியா, பி.ஜெயதாஸ் - எஸ்.கஜனி. (8-190)

# மேசைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மே13

யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் டாக்டர் டி.ரி.நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்தும் மேசைப்பந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியின் மேசைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.

காலை 9மணிக்கு சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டியும் பிற்பகல் 2மணிக்கு வயதுக் கட்டுப்பாடற்றவர்களுக்கான போட்டியும் நடைபெறும். (8-190)

# சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,மே13

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் திங்கள் கிழமையும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு ஆண் - பெண்களுக்கான போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதலும் 15 வயதுப் பிரிவு ஆண் - பெண்களுக்கான போட்டிகள் நாளைமறுதினம் 16ஆம் திகதி பிற்பகல் 2.45 மணி முதலும் நடைபெறும். (8-190)

# துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,மே13

எதிர்வரும் ஆடிப் பிறப்பை முன்னிட்டு அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகம் மாபெரும் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

கழகங்களுக்கிடையிலான 7பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (8-202)

# பிற்போடப்பட்டது

கிளிநொச்சி,மே13

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படவிருந்த மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியன பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் பெரு விளையாட்டு காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர். (8)

# கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ் .மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30மணி முதல் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (8-190)






# எல்லைப்படை மாவீரர் நினைவு: உதைபந்தாட்டம் ஒரு பார்வை

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதையக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும்



வீரர்கள் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர்.

யாழ். லீக்கைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக் கழகமும் மின்னொளியில் இரவு 9 மணிக்கு மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணி வீரர்களும் சோர்வடையாது விளையாடினார்கள். ஆட்டம் ஆரம்மாகிய 6ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணியின் வலது முன்னணி வீரன் நிமலராஜன் முன்னணி வீரர் யூட் பிரசாந்தனிடம் பந்தைக் கொடுக்க அவர் அதனை அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

ஊடக அனுசரணை உதயன்

இதனைத் தொடர்ந்து ஆட்டம் விறுவிறுப்பான நிலைக்குச் சென்றது ஆனால், தொடர்ந்து 18ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணியின் முன்னணி வீரர் யூட் பிரசாந்தன் மைதானத்தின் மத்திய பகுதியின் இடது பக்கத்தில் வைத்து பின்னணி வீரன் ஒருவர் அடித்த பந்தைப் பெற்று எதிரணி வீரர்களின் கடும் எதிர்ப்புக்களையும் மீறி கோல் கம்பத்தினுள் பந்தைச் செலுத்தி தனது அணிக்கான இரண்டாவது கோலையும் பெற்றுக்கொடுத்தார்.

மூன்றாவது கோல் 32 ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக முன்னணி வீரன் எடிசன் தனக்குக் கிடைத்த பந்தைக் கொண்டு சென்று மேலும் ஒரு கோலை அடித்து வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் 3:0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினருக்கு உரியது என்றே கூறவேண்டும். மூன்று கோல்களை பல்கலைக்கழக அணியினர் பெற்ற போதிலும் லக்கி ஸ்ரார் அணியினர் சளைக்காத நிலையில் விளையாடினார்கள். இதேநேரம், கோல்கள் பெறும் வாய்ப்புக்களையும் இழந்தார்கள்.

லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக வீரன் சயந்தன் 20 ஆவது நிமிடத்தில் மத்தியஸ்தரினால் சிவப்பு அட்டைகாட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் பத்து வீரர்களுடன் விளையாடினார்கள். 35ஆவது நிமிடத்தில் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு பல்கலைக்கழக அணிவீரன் செய்த தவறு காரணமாக தண்டனை உதை எல்லைக்குள் நேர் உதையொன்று வழங்கப்பட்டது.

லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரன் இதனைச் சரியான முறையில் உதைத்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டத்தில் 3:1 என்ற கோல்கணக்கில் பல்கலைக்கழக விளையாட்டுக் கழக அணி வட்டக்கச்சி விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டது.

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆட்டத்தில் கலந்துகொள்ள கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் சமுகம்கொடுக்காமையால் யாழ்ப்பாணம் லீக் அணியும் வலிகாமம் லீக்குக்கும் இடையே இடம்பெற்ற காட்சி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (8-86)

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை நியூ அஜஸ்மின் படகுத் தொழிற்சாலை உரிமையாளர் அன்ரனி தேவகுமார் - மேரி மரியநாயகி ஆகியோரின் சிரேஸ்ட புத்திரி

**செல்வி மேரி யோசப்பின் சிந்துஜா (ராசாத்தி)**

அவர்களின் மறைவிற்குக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரோடு நாமும் பங்குகொள்கிறோம்.

யாழ்ப்பாணம்.

(45285)(42-11-14)

லதா அக்கா
குடும்பத்தினர்.

# 9ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றிநவிலலும்



செல்வி
அன்ரனி தேவகுமார்
மேரியோசேப்பின் சிந்துஜா
(சிந்து - ராசாத்தி)

07.05.2005 சனிக்கிழமை அன்று ஆண்டவன் அடிசென்ற எமது குல விளக்கு செல்வி அ.சிந்துஜா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு உடன் உதவி புரிந்தவந்தவர்களுக்கும், இறுதி நல்லடக்கத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் ஏனைய ஒத்தாசை நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இல்லத்தில் 15.05.2005 ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:
தனிப்பட்ட அழைப்புத் தராமைக்கு வருந்துகின்றோம். இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.அன்ரனி தேவகுமார்
(குமார் - தந்தை)

வேலுப்பிள்ளை கடையடி,
மாதகல்.

(45286)(42-11-14)

# இதய நிறை தலைவருக்கு
# முதலாம் ஆண்டு நினைவுப் பொழிவு



அமரர்

## இளையதம்பி சிவசுப்பிரமணியம்

(நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்)

| உருவாய்-மண்ணில் | திதி: | அருவாய்-விண்ணில் |
| --- | --- | --- |
| 09.09.1933 | 13.05.2005 | 24.04.2004 |

பூஞ்சிரிப்பைச் சிந்திநின்ற பூமுகமும் மறையவில்லை
புதுமை படைத்தவுந்தன் புகழ்த்தடங்கள் மறையவில்லை
வாஞ்சையொடு வடித்துவைத்த வல்லமையும் மறையவில்லை
வல்லமைகள் தந்துநின்ற வண்மையரே மறைந்தீரோ?
தீஞ்சுவையாம் வாழ்வாக்கித் திகழவைத்த தந்தையரே!
திசையெல்லாம் வாழ்த்தநின்று செய்தவங்கள் வளர்த்தவரே!
ஆஞ்சுவைகள் அரனடியில் அணிதிகழ நீர் பெறவே
அஞ்சலித்தோம்! அமைதிகொள்க! ஐயா வணங்குகிறோம்!

எம் அன்புத் தலைவரின் ஆத்மசாந்திக்காய் அஞ்சலிக்கிறோம்.

(42280) (54-14-15)

தற்காலிக முகவரி:
புகையிரத நிலைய வீதி.
கோண்டாவில்.

- குடும்பத்தினர். -
நிரந்தர முகவரி:
மீசாலை கிழக்கு,மீசாலை.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே13

மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறுகின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருவிழாக்காலங்களில் தினமும் மாலை 7 மணிக்கு சைவப்புலவர் நித்தியதசீதரன் தொடர்சொற்பொழிவாற்றி வருகின்றார்.

(த-13-203)

★★★

யாழ்ப்பாணம்,மே13

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விஸ்வகுலப் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. (த-204)

★★★

யாழ்ப்பாணம்,மே13

சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலயப் பார்த்திப வருடப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் விசேட அபிசேக ஆராதனைகள், கூட்டுப்பிரார்த்தனை என்பன நடைபெறும். (த-203)

★★★

யாழ்ப்பாணம்,மே13

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

திருவிழா தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன. பெருந்திருவிழாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(த-15-203)

★★★

சித்தன்கேணி பெரியவளவு மகாகணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழா நாள்களில் தினமும் மாலை 6.30 மணிக்கு சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (த-175-203)

★★★

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (த)

Classes for New Batch ---

Diploma in English
(Week Days & Week End Classes)

IELTS
(Week End Classes)

Certificate in English
(Week Days & Week End Classes)

COMMENCEMENT 14/05/2005

LONDON ENGLISH COLLEGE
NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180
BCNS
No: 229A, Mitcham Road,
Tooting, London, SW 17910 UK

# தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனமொன்றுக்கு போட்டோ பிரதி இயக்குநரும் பில் கிளார்க் ஒருவரும் (பெண்கள் மட்டும்) தேவை. (பழக விரும்புபவரும் விண்ணப்பிக்கலாம்).

16.05.2005 இற்கு முன்னர் நேரில் வரவும்.

சன்லைட் றைக்கிளீனேர்ஸ்
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

(45287) (42-14)

# துன்பந்தீர அருள்வாக்கு

குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். கொழும்பு - 6, பேர்ணாந்து வீதியிலுள்ள துன்பந்தீர்க்கும் கலியுக தெய்வமான ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்திலிருந்து

## ஞானகணேஸ்வரி அம்மன்

அவர்கள் 14.05.2005 முதல் 18.05.2005 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்.

விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

ஞானவைரவர் ஆலயம்,
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

பூசைநேரம்: காலை 10.30 மணி
மாலை 5.30 மணி

(45294)(42-14)

உ
சிவமயம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# நோர்வே இந்து கலாசார மன்றம்
# அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயம்

Norges Hindu Kultur Senter, Siva Subramaniyar Alayam, Post box 85 Grorud, Martinstrandlis Vei 10, 0956 OSLO, Norway
http://WWW.hindutemple.ne Tele Phone:+4722 25 1301 Tele Fax:+ 4722165415





## மஹாகும்பாபிஷேகதின ஏழாண்டுப் பூர்த்தி
## (108) சங்காபிஷேக விஞ்ஞாபனம்
## 13.05.2005 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி

குகநேயச் செல்வர்களே!!

நோர்வே இந்து கலாசார மன்றம் புலம் பெயர்வாழ் தமிழ் மக்களின் மனச்சாந்திக்காகவும் ஆத்மீக ஈடேற்றத்திற்காகவும், இந்து கலாசாரத்தைப் பேணிக்காப்பதற்காகவும் நோர்வேயின் தலைநகராகிய ஒஸ்லோவில் கடந்த பதின்மூன்று வருடகாலமாக சேவைபுரிந்து வருகின்றது. புலம்பெயர் சூழலில் இப்பணிமிகவும் அவசியமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

ஓர் இனத்திற்கு அதன் மொழி பங்களிப்பு முக்கியமோ, அதேபோல சமயமும் முக்கியமானது. மொழியும் சமயமும் இன்றி ஓர் இனத்தை நாம் அடையாளங்காண முடியாது. அந்தவகையில், நோர்வே இந்து கலாசார மன்றம் தனது பணியினை அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயமானது தனது பணியினைச் செய்துவருகின்றது. ஒஸ்லோவில் அருள் பாலித்திருக்கும் இந்த ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் பூர்த்தியினை ஒட்டி இன்று (13.05.2005) வெள்ளிக்கிழமை மணவாளக் கோல உற்சவத்துடன் சங்காபிஷேக விஞ்ஞாபனமும் இடம்பெற இருக்கிறது.

உதிக்கின்ற செங்கதிரோன் மறையாமலே மறுதினம் தோன்றும் இயற்கை எழில் கொஞ்சும் அதிசயத்தை வருடத்தில் ஒரு தினமாகக் கொண்டுள்ள நோர்வே நாட்டின் ஒஸ்லோவில் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாம் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் பக்தர்களுக்கு அருள்மழை பொழிந்து கொண்டிருக்கும் அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலய மகாகும்பாபிஷேகதின ஏழாவது ஆண்டு பூர்த்தி தினத்தை முன்னிட்டு நிகழும் பார்த்திப வருடம் சித்திரை 31ஆம் நாள் வெள்ளிக்கிழமை (13.05.2005) மாலை 3 மணிக்கு அஸ்டோத்திர சத (108) சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளமையால் அச்சங்காபிஷேகத்தில் அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அருட்கடாட்சத்தினைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தொடர்ந்து விசேட பூசை ஆராதனையும் முருகப்பெருமான் வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

சங்காபிஷேகத்தில் பிரதமகுருவாக நடத்துபவர்.
**சிவாகம கிரியா ரத்னா சிவஸ்ரீ கிருஸ்ண பங்குசக் குருக்கள் (ஆலய பிரதமகுரு)**
ஏனைய குருமார் **சிவஸ்ரீ சிவராசசர்மா, பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா.**

நோர்வே (45288)(42-14-1) தகவல்: நிர்வாகம்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# தெற்கின் தலைமை: தமிழர் கருத்து

அரசியல் அதிகாரத்தில் தனது நிலையைத் தொடர்ந்து தக்கவைத்திருக்கும் எத்தனமாக அரசமைப்பை மாற்றியமைக்கும் முயற்சியை மீண்டும் ஆரம்பித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

1994இறுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வென்று, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்த சந்திரிகா, சுமார் பதினொரு ஆண்டுகள் அந்தப் பதவிநிலை அதிகாரங்களைப் பிரயோகித்து முடிந்த நிலையில் அரசமைப்பை மாற்ற எத்தனிக்கின்றார்.

இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டுக்கு உகந்ததேயல்ல என்று கூறி, தாம் அந்தப் பதவிக்கு வந்தால் அந்தப் பதவியை அடுத்த ஒரு வருட காலத்துக்குள் ஒழிப்பேன் என்று எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கியே தமது முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் வென்றார் அவர்.

ஆனால், அந்தப் பதவியில் சுமார் பதினொரு ஆண்டுகள் அவர் நீடித்துவிட்டார். இப்போது அந்தப் பதவியில் தமது இரண்டாவது பணிக்காலத்தை முடிக்கும் அந்தத்தில் நிற்கின்றார். அரசமைப்பு ஏற்பாடுகளின்படி அடுத்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக அவர் நிற்கமுடியாது. விரைவில் அப்பதவியை வேறு ஒருவருக்குக் கையளித்துவிட்டு, அதிகாரமற்றவராக வெளியேறவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை, அப்பதவியை ஏற்று ஒருவருடத்துக்குள் ஒழிப்பேன் என்றவர், அப்பதவியில் தாம் நீடிக்கக் கூடிய காலம் அவ்வளவும் அந்தப் பதவியை வகித்து, அதிகாரத்தைப் பிரயோகித்து, ஆடவேண்டியதை எல்லாம் ஆடி முடித்து, இனி அப்பதவியில் தாம் தொடரமுடியாது என்ற சட்ட இக்கட்டு வந்ததும் அப்பதவி ஆட்சி முறையை மாற்ற முனைகிறார். அதற்காக அரசமைப்பையே மாற்றியமைக்க முயற்சிக்கின்றார்.

இந்த முயற்சியில் அவர் வெற்றிபெறுவாரா என்பது ஒருபுறமிருக்க, இந்த முயற்சியில் அவர் வென்று, அரசமைப்பை மாற்றி, அதன் கீழ் வேறு ஒரு பதவியோடு அரசுத் தலைவியாக மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் ஈழத் தமிழர்களின் நிலை என்னவென்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஈழத் தமிழர்களின் அதிகாரபூர்வ - ஏக - பிரதிநிதிகளாக இருக்கும் விடுதலைப் புலிகளின் சார்பில் அந்த இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறித்து கூறியிருக்கும் கருத்து இந்த விடயத்தில் முக்கிய அம்சமாக அமைகிறது.

*"சந்திரிகா அம்மையார் மீது தமிழ்மக்கள் நம்பிக்கையை முற்றாக இழந்துவிட்டனர். அவரின் ஆட்சிக்காலத்தில் உயிருக்கும், உடைமைக்கும் ஏற்பட்ட மிகமோசமான இழப்புகளைப் போன்று இதற்கு முன்னர் எப்போதும் பாதிப்புகளை எமது மக்கள் சந்தித்ததேயில்லை. அவரது ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்கள் மோசமான பேரவலங்களைச் சந்தித்தனர். அவர் மீது கடும் சந்தேகம் கொண்டுள்ள எமது மக்கள் அவரை வெறுக்கின்றார்கள். அவர் மீதான நம்பிக்கையீனம் அதிகரித்து வருகின்றது.*

*"மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது - தமது கடந்த கால ஆட்சியின் பெறுபேறுகள் காரணமாகத் தமக்குக் கிட்டிய அனுபவங்களின் அடிப்படையில் - அவர் திருந்துவார் என எமது மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஏமாந்தனர். அவர் திருந்தவேயில்லை.*

*"இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு எட்டுவதை இழுத்தடித்துக் குழப்பியதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற எமது மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை மறுக்கும் கொடூரத்திலும் அவர் ஈடுபட்டார்."*

- இப்படி சந்திரிகா அம்மையார் குறித்து தமிழர் தரப்புத் தலைமை கருத்து வெளியிட்டிருக்கின்றது.

தென்னிலங்கை அரசின் தலைமைப் பதவியை யார் வகிப்பது என்பதைத் தென்னிலங்கை மக்களே தீர்மானிக்கவேண்டும். அதனை வடக்கு - கிழக்கில், தமிழர் தாயகத்தில் வாழும் மக்களும் ஒப்புக்கொள்வார்கள்.

ஆனால், இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைக்கு ஒரு சமரசத் தீர்வு, அமைதி வழியில் எட்டப்பட வேண்டுமானால், அதற்கு யார் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்?, யார் பொருத்தமற்றவர்களாக இருப்பார்கள்? என்பதைப் பிணக்கில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பான தமிழர்கள் மற்றைய தரப்பான சிங்களவர்களுக்குக் கோடிகாட்டுவதில் என்ன தப்பு?

தமிழ்ச்செல்வனின் கருத்தை அப்படிக் கோடிகாட்டுவதாகத் தென்னிலங்கை மக்கள் தங்கள் சிந்தனையில் எடுத்துக்கொண்டால் நல்லது.

அமைதித் தீர்வா அல்லது ஆயுத வழி முடிவா என்பதை அவர்களே தீர்மானிக்க இந்தக் கருத்து உதவக் கூடும்.

# யாழ்.மாவட்டத்தில் படிப்படியாக மிதிவெடிப் பாதிப்பு குறைகிறது!

யாழ்ப்பாணம்,மே13

குடாநாட்டில் மிதிவெடியால் பாதிக்கப்படுவோர் தொகை குறைவடைந்து வருகின்றது.

இத்தகவலை யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்றிட்ட அலுவலகத்தின் அதிகாரி எஸ்.நேசன் உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது மிதிவெடிகளால் பாதிக்கப்படுவோர் பற்றிய மதிப்பீடு எந்த மட்டத்தில் உள்ளது என்று கேட்டதற்கே அவர் இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் மிதிவெடியால் பாதிக்கப்படுவோர் தொகை தற்போது குறைவடைந்து வருகின்றது.

2001 ஆம் ஆண்டு 90 பேரும், 2002 ஆம் ஆண்டு 70 பேரும், 2003 ஆம் ஆண்டு 50 பேரும், 2004 ஆம் ஆண்டு 20 பேரும் மிதிவெடியால் பாதிக்கப்பட்டனர். இந்தத் தொகை ஆண்டுக்கு ஆண்டு மிகக்குறைவடைந்து வந்துள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை 7 பேர் மட்டுமே மிதிவெடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவடையும்.

குடாநாட்டைப் பொறுத்தவரை மக்கள் குடியமர்ந்த பகுதிகளில் மிதிவெடிகளை அகற்றுவதற்கென மூன்று நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்கள் மிதிவெடிகளை அகற்றும் பகுதிகளில் மக்கள் கூடுதலான பங்களிப்பினை வழங்கினால் இந்தப் பணியை மேலும் துரிதப்படுத்த உதவும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (த-13)

# கச்சாயில் பதற்றம் தொடர்கின்றது! அங்கிருந்து மக்கள் இடம்பெயர்வு!!

தென்மராட்சி,மே13

கச்சாய்ப் பகுதியில் இரு பகுதியினருக்கிடையே இடம்பெற்று வரும் மோதலையடுத்து அங்கு பதற்றநிலை தொடர்கிறது. இதனால் சில குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு மூன்று வாகனங்களில் வந்தவர்கள் நடத்திய தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்; வீடுகள் பல அடித்து சேதப்படுத்தப்பட்டன. கார், உழவு இயந்திரம் ஆகியவையும் சந்தியிலிருந்த மிதிவண்டி திருத்தும் நிலையமும் எரிக்கப்பட்டன.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை வாகனத்தினால் மோதியதில் காசித்தம்பி கந்தசாமி (வயது 44) என்பவரும்-

இனந்தெரியாதோர் வீடு புகுந்து தாக்கியதில் கர்ப்பிணியான சிறிரஞ்சன் இராஜேஸ்வரி (வயது 22) என்பவரும்- காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மோதல் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தக் கொடிகாமம் பொலீஸார் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், மக்கள் வீதிகளில் நடமாடப் பயப்படுகின்றனர். தமக்கு ஏதாவது ஆபத்து நேருமோ என்ற அச்சம் காரணமாகப் பல குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளிலுள்ள தமது உறவினர், நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-117)

# கத்திகள், பொல்லுகளுடன் வானில் சென்றோர் கைது!

தென்மராட்சி,மே13

கச்சாய்ப்பகுதியில் அசம்பாவிதத்தினை ஏற்படுத்தும் வகையில் கத்திகள், வாள்கள், பொல்லுகளுடன் வானில் சென்று கொண்டிருந்த 13 பேரைக் கொடிகாமம் பொலீஸார் கடந்த 9 ஆம் திகதி மடக்கிப் பிடித்தனர். இவர்கள் அனைவரும் யாழ்.நாவாந்துறையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

நாவாந்துறையைச் சேர்ந்த தேவதாஸன் அலோசியல், அல்பிரட் பாபு, செட்டியார் ஜெயதீஸ்வரன், நாகராசா சபேசன், சிவசுப்பிரமணியம் கிருஷ்ணகுமார், கணபதிப்பிள்ளை மகேந்திரராசா, அருளம்பலம் கிருஷ்ணபாலன், அந்தோனி கோமளதாஸ், விஜயகாந்தன், யேசுதாஸன் தேவதாஸ், சத்தியசீலன் வில்சன், இருதயநாதன் மாறன், யாழ்.கொட்டடியைச் சேர்ந்த இராசா செல்வச்சந்திரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த 13 பேரையும் கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

13 பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-117)

# புதுவையின் கவிதை நூல் வெளியீடு 28 ஆம் திகதி கைலாசபதி அரங்கில்!



யாழ்ப்பாணம்,மே13

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தடித்த அட்டைக்கட்டுடன் அழகுற வடிவமைக்கப்பட்ட இக் கவிதைத் தொகுப்பினை தமிழக ஓவியர் ட்ரொஸ்கி மருதுவின் ஓவியங்களும், தாயகப் புகைப்படக் கலைஞர் அமரதாசின் புகைப் படங்களும் அலங்கரிக்கின்றன.

'நங்கூரம்' வெளியீடாக 432 பக்கங்களில் இந்நூல் வெளிவந்துள்ளது. (த-204)

## வலிகாமம் கல்வி வலயத்தில்

# அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பல பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் வலிகாமம் கல்வி வலயத்தினரால் கோரப்பட்டுள்ளன.

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.I, வகுப்பு 2.II ஐச் சேர்ந்த பட்டதாரிகளும், இலங்கை ஆசிரியர் வகுப்பு I, வகுப்பு 2.I, வகுப்பு 2.II ஐ சேர்ந்த பட்டதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்.

அதேபோல அளவெட்டி சதானந்த வித்தியாசாலை, காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை என்பவற்றுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.II, வகுப்பு IIIஐ சேர்ந்தவர்களும், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2.I, வகுப்பு 2.II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் என்பனவற்றுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு I, வகுப்பு 2.I ஐ சேர்ந்த பட்டதாரிகள், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2.I ஐ சேர்ந்த பட்டதாரிகள் மற்றும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 2.II ஐ சேர்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரிகள் ஆகியோர் விண்ணப்பிக்க முடியும்.

அதிபர் சேவைகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத விடத்தில் மாத்திரமே ஆசிரிய சேவை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் எனவும் -

வலிகாமம், கல்வி வலயத்தில் மாதிரி விண்ணப்பப் படிவங்களைப் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பங்களைத் தயாரித்து இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (8-152)

## நாளை

சித்திரை 31
சனிக்கிழமை
14.05.2005
திதி : ஷஷ்டி
முன்னிரவு 10.12வரை
நட்சத்திரம் : பூசம்
முழுவதும்
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 02.53 - 04.23
ராகுகாலம்: 08.53 - 10.23
(யாவும் பழைய நேரப்படி)

# தமிழ்த்தினப் போட்டிகளில் இராமநாதன் கல்லூரி முதலிடம்

வலிகாமம்தெற்கு,மே13

தமிழ்மொழி தினத்தை முன்னிட்டு உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி 16 முதலிடங்களைப் பெற்று முன்னிலையைப் பெற்றது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி 16 இடங்களையும், உடுவில் மகளிர் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி ஆகியன தலா நான்கு இடங்களையும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, இணுவில் இந்துக் கல்லூரி என்பன தலா மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டன.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (த-152)

# பல்கலைக்கழகங்களில் 14 புதிய பாடநெறிகள்!

## அனுமதி பெறும் மாணவர் தொகையும் அதிகரிக்கும்

கொழும்பு,மே13

நாட்டில் உள்ள சில பல்கலைக்கழகங்களில் 14 புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் அதற்கமைய பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை ஆயிரத்து 405 ஆல் அதிகரிப்பதற்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

சமுத்திர மற்றும் மிருக உயிரினங்கள் தொடர்பான பாடநெறி, பூரண மருத்துவ சேவைகள் பாடநெறி மற்றும் சலுகைகள் வழங்கப்படுவது தொடர்பான முகாமைத்துவ பாடநெறி உள்ளிட்ட பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இவ்வாண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு இப்புதிய பாடத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இப்பாடத்திட்டங்களுக்காக மேலதிகமாக அனுமதிக்கப்படவுள்ள ஆயிரத்து 405 மாணவர்களோடு பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 225 ஆக அதிகரிக்கும்.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை மேன்மேலும் வழங்க வாய்ப்பளிப்பது தொடர்பாக வர்த்தகத்துறையினரோடு மேற்கொள்ளப்பட்டுள்ள பேச்சுக்களின் பின்னர் இப்புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இப்பாட நெறிகள் கொழும்பு, பேராதனை மற்றும் ருகுணு பல்கலைக்கழகங்களில் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-206)

## உதயவாக்கு

ஒருவன் வாழ்வதற்காக உண்ண வேண்டும்; உண்பதற்காக வாழக் கூடாது. – பிராங்க்ளின்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 04 - 1939

மறைவு 06 - 05 - 2003

### அமரர் பொன்னுத்துரை கணநாதன்

இரண்டு ஆண்டுகள் நகர்ந்தாலும் உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(45252)(26-14-15)

## கலை இலக்கிய விழாப் போட்டிகள்

வலி.தெற்கு,மே13

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக தேசிய கலை இலக்கிய விழா விரைவில் நடைபெறவுள்ளது. இந்த விழாவை முன்னிட்டு கலாசார பிரிவினரால் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாடகம், எழுத்துப் பிரதிப்போட்டி, சித்திரப்போட்டி, நாட்டுப்புறப்பாடல் போட்டி, கலை இலக்கிய நிறுவனங்கள் பங்குபற்றும் நடனப்போட்டி என்பவை நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-152)

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம்,மே13

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து 2002ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் கல்வி கற்று வெளியேறிய பின்வரும் மாணவர்கள் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தங்களது பெறுபேற்றுச் சான்றிதழ்கள், அடையாளஅட்டை சகிதம் தவறாது தொடர்புகொள்ளுமாறு உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத் தலைவர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

சாந்தினி வேலுப்பிள்ளை (என்.டி.ஈ.2002), கந்தையா ஞானச்சந்திரன் (எச்.என்.டி.ஏ.2003), கனகசபை கோடீஸ்வரன் (எச்.என்.டி.ஏ.2003), இராமசந்திரா தயாகரன் (எச்.என்.டி.ஏ.2003), சிவகெங்கா சிவானந்தன் (எச்.என்.டி.ஏ.2003), சோமசுந்தரம் யசோதரன் (எச்.என்.டி.ஏ.2003), சோதிநாதன் முகுந்தன் (எச்.என்.டி.ஏ.2003), சசிகலா சின்னத்தம்பி (எச்.என்.டி.ஏ. 2003), பத்மநாதன் லுரேந்திரன் (எச்.என்.டி.ஏ.2003), சிவயோகினி சின்னத்தம்பி (எச்.என்.டி.ஏ.2003), சோமசுந்தரம் சுகிர்தன் (எச்என்டி.ஏ.2003), ஞானசேகரம் ரூபகரன் (எச்.என்.டி.ஏ.2003). (8)

## ஆங்கில பாட செயலமர்வு

தென்மராட்சி,மே13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1, 11 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்பாடு சார் வாய்மொழி ஆங்கிலப் பாட செயலமர்வுகள் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் இச்செயலமர்வுகளில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (த-117)

உ

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

யாழ்ப்பாணம் வண்ணை

### ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி உற்சவம்

பெருமாள் அடியார்களே!

இன்று (13-05-2005) வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணிக்கு ஆலயத்தில் -
ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி திருவிழா நடைபெறும்.
அடியார்கள் அனைவரும் வந்து ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்து ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

பெருமாள் கோயில்,
யாழ்ப்பாணம்.

- ஆதீன மகாசபை.

(சி-42777)(26-14-15)

## அறிவித்தல்

### பூர்வாங்க அளப்பனவு ஆணை

மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி

வழக்கு இல.7215/பிரிவிடல்

மேற்படி வழக்கில் அருளப்பா ஈஸ்வரதேவன் உத்தரவு பெற்ற நில அளவையாளராகிய நான் மேற்படி நீதிமன்றினால் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். எனவே, 2005-05-28 ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்துவரும் நாள்களிலும் 1977ஆம் ஆண்டு 2ஆம் இலக்கப் பிரிவிடற் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பின்னால் விவரிக்கப்படும் ஆதனம் என்னால் அளப்பனவு செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பகுதி, நாவற்குழி, கோயிற்பற்று, கைதடியிறை 'சொரிகுரும்பை வயல்' ஐந்து பிரிவுகளுக்கும் நெற்பர. 100½ நூறரைக்கும் எல்லை கிழக்கு சிதம்பரநாதன் வினாசிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும் குளமும் வடக்கு கண்டி றோட்டு, மேற்கு வெஸ்லியன் மிசன் ஆங்கிலப் பாடசாலைக்குரிய ஆதனம். தெற்கு சின்னப்பு தர்மராசாவுக்கும் பெண் சாந்தத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலும்.

அ.ஈஸ்வரதேவன்,
நீதிமன்ற ஆணையாளர்.

(45180)(26-14-15)

## நாளை ஆரம்பமாகின்றது

### திருமறைக் கலாமன்றம்

ஓவியக் கலைவட்டம் நடத்தும்

## கடல் வரைந்த ஓவியம்

- ஓவியக் கண்காட்சி -

காலம்: 14-05-2005 முதல் 21-05-2005 வரை
நேரம்: தினமும் காலை 10.00மணி - மாலை 5.00 மணி
இடம்: கலாமுற்றம், இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணம

பிரவேசம் இலவசம்

- டிசெம்பர் 26, 2004 இல் உலகை உலுக்கிய ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் கோரத் தாண்டவத்தை ஓவியக் கலைவட்ட இளம் ஓவியர்கள் ஓவியங்களாக உங்கள் முன்கொண்டு வருகின்றார்கள்.
- ஏற்கனவே கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெற்ற இக்கண்காட்சி இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்....

கடல் வரைந்த ஓவியக் கண்காட்சியைப் பார்த்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கண்காட்சி எமது நாட்டில் சுனாமியால் ஏற்பட்ட கோரத் தாண்டவத்தினையும் அது ஏற்படுத்திய அழிவுகளையும் தத்ரூபமாக எடுத்துக்காட்டியதுடன், எமது வருங்காலச் சந்ததியும் இதனைக் கண்டு உணர்ந்துகொள்ள வாய்ப்பாக அமைந்ததையிட்டு பெருமையடைகின்றேன்.

சிவநாதன் கிஷோர்,
நாடாளுமன்ற உறுப்பினர் - வன்னி மாவட்டம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 222 2393. - திருமறைக் கலாமன்றம்.

(சி-42787)(26-14-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 01 - 07 - 1920

மறைவு 12 - 04 - 2005

### அமரர் செல்லப்பா சுப்பிரமணியம்

(முருகாமணியம்)

(முன்னாள் கிளை முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)

அன்னாரின் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (13-05-2005) வெள்ளிக்கிழமை காலை நடைபெறுகின்றன. இந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்.

(45170)(26-14-15)


PRE CERTIFICATE
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் வளர்ந்தோருக்கான விசேட ஆங்கில பாடநெறி.

PRE FOUNDATION
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் சிறார்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி



IELTS by Top Lecturer

சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்

Pre - Foundation
Level I,II,II,IV

- அடிப்படை ஆங்கில பேச்சுப்பயிற்சி
- ஆங்கில சொல்வளத்தை மேம்படுத்தல்
- ஆங்கில சொல் பிரயோகம், உச்சரிப்பு
- ஆங்கிலத்தில் உரையாடல்
- ஆங்கில இலக்கண தொழிற்பாட்டை மேம்படுத்தல்
- ஆங்கிலம் எழுத்துக்கூட்டி வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் எழுதப்பயிலுதல்
- பல்வேறு பாத்திரங்களிற்கு ஏற்ப பேசுதல்.

BRITISH BUSINESS SCHOOL

யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். இல:174, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.

HOT LINE : 021-222-5796

British Business School

# விழிப்போடு நிற்பதுதான் நாம் இப்போது விடுதலைக்குக் கொடுக்கின்ற விலை

## ஈழவேந்தன் எம்.பி.



மட்டக்களப்பு சந்திவெளியில் அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது படையினர் நடத்திய கொடூரத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் விடுத்த அறிக்கை இது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முன்னிலையிலேயே முதியவர் ஒருவர் சாகடிக்கப்பட, இருபத்தொரு பேர் படுகாயமுற, மாணவ - மாணவிகளையே பதம் பார்க்கின்ற படுபாதகச் செயல் மட்டக்களப்பில் நடைபெற்றிருக்கின்றது.

மட்டக்களப்பு, சந்திவெளிப் பகுதியில் இராணுவத்தினரால் புதிதாகக் கட்டப்பட்ட காவலரணை அகற்ற வேண்டுமெனக் கூறி அமைதி வழியில் மக்கள் நடத்திய போராட்டத்திற்கு ஆயுதம் கொண்டு, தாக்குதலை அரசு படை நடத்தியுள்ளது. எந்நிலையிலும் இந்நாட்டில் அமைதி ஏற்படக்கூடாது. புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதை எப்படியும் தடுத்தே நிறுத்துவோம். நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி இரத்தக் களரியை உண்டு பண்ணுவதே சிங்கள இராணுவத்தின் திட்டமிட்ட சதிச்செயலாகும்.

யாழ். நகரில் 50,000 சிங்கள இராணுவம் குடிபுகுந்த நிலையில் ஏழு லட்சம் தமிழ் மக்கள் வெளியேற ஐந்து லட்சம் தமிழ் மக்களை ஆட்டிப் படைக்கின்றது இராணுவம். எம் மக்கள் தம் குடிசைகளிலோ, வீடுகளிலோ வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மாவை சேனாதி ரா உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களே த வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலை. அவரின் பக்கத்து வீட்டோருக்கும் படுமோசமான நிலையே நிலவுகின்றது. மாவையாரைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பலாத்காரமாகப் பறித்து (Forceful acquisition of lands) சிங்களப் படை அங்கு நிலைத்து வாழ சதி முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாக எமக்கு நம்பத்தக்க செய்திகள் கிடைத்துள்ளன. இம்மண்ணில் சிங்கள இராணுவம் குடும்பத்தோடு குடியேறின் அடுத்து சிங்களப் பள்ளிக்கூடங்கள் உருவாகும். புத்த கோயில்களும் கட்டியெழுப்பப்படும். நாம் தூங்கி வழிவோமாயின் இந்நிலை ஏற்படுவதை எவரும் தடுக்கமுடியாது.

இப்பொழுதே தெல்லிப்பழையில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தை எவரும் சென்று பார்வையிடமுடியாது. குரும்பசிட்டி மக்கள் அங்கு மீளக்குடியேற முடியாது என்பது மட்டுமல்ல அங்கு சென்று பார்வையிட முடியாத நிலையும் உருவாகியுள்ளது. எம் தந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த மண்ணில் நாம் வாழமுடியாது என்பது மட்டுமல்ல, அம் மண்ணைப் பார்க்கக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் விளமபின், நாம் வேரோடு சாய்க்கப்படுகின்றோம். உழவர்கள் இங்கு உழவுச் செயலில் ஈடுபட முடியாது. மீனவர்கள் கடலிற் சென்று மீன் பிடிக்கமுடியாது. மண்ணும் பறிபோகின்றது; கடலும் பறிபோகின்றது. பள்ளிக்கூடங்கள் முறையாக இயங்காதநிலையில் பள்ளிச்சிறாா களின் கல்விக்கு உலை வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் சிங்கள அபகரிப்பு தொடர்கின்றது. எல்லையில் மட்டுமல்ல தொல்லை. பொத்துவிலிலும் தொல்லைதான். உல்லையிலும் பொத்துவிலிலும் புத்தருக்குச் சிலை எழுப்பப்படுகின்றன. புத்த கோயில்கள் கட்டியெழுப்பப்படுகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் பெருகுகின்றன. அம்பாறை பறிபோகின்றது. எம்மைக் காக்க ஒருவரும் இல்லையே என்று இஸ்லாமிய உடன் பிறப்புகள் வேதனையால் வெம்மி அழுகின்றார்கள். அவர்களின் தலைமைப்பீடம் செய்வதறியாது தடம்புரண்டு தடுமாறுகின்றது.

திருமலையிற் சிங்கள வெறியாட்டம் பல் வேறு வடிவிற் தலைதூக்கியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தரும், துரைரத்தினசிங்கமும் ஏகத்தோடு குரல் எழுப்புகின்றனர். தமிழர் பேரவை அங்கு போர்க் கோலம் பூண்டு அங்கு போர்க்களத்தில் குதித்துள்ளனர். அங்குள்ள விடுதலைப் புலிகளோ நாம் புலிப்பாய்ச்சல் பாய்ந்தால்தான் எம் தமிழன் பூமியைக் காக்கமுடியும் என்று ஓங்கிக் குரலெழுப்பத் தொடங்கியுள்ளனர்.

எனவேதான், மட்டக்களப்பு சந்திவெளியில் சிங்களப்படை நடத்தியுள்ள தாக்குதல் தமிழினத்தைப் பீடித்துள்ள நோயின் அறிகுறியேயன்றி அதுதான் நோயல்ல என்று கூறுகின்றோம். எம்மைப் பீடித்துள்ள நோய் அரசியல் புற்றுநோய். (Cancerous growth in the body politics) என்பதை உணர்ந்து எம்மை ஊடுருவி அறுக்கும் புற்றுநோயை அகற்றக் காலம் கடக்காது அறுவை வைத்தியத்தில் ஈடுபடுவோமாக. காலம்கடந்து அறுவை வைத்தியத்தில் ஈடுபடின் அறுவை வைத்தியம் வெற்றி. ஆனால் நோயாளி இறந்ததாகச் செய்தி கிடைக்கும் .

விழிப்போடு இருப்பதுதான் நாம் விடுதலைக்குக் கொடுக்கின்ற விலை என்பதை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும். (ஐ)

# இராணுவ நெருக்குவாரங்களுக்குள் மண்டைதீவில் 300 குடும்பங்கள்

யாழ்ப்பாணம்,மே13

மண்டைதீவுப் பிரதேசத்தில் அன்றாட வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தையும், அங்கு தங்கியிருக்கும் ஸ்ரீலங்கா படைகளையும் அகற்றி நெருக்குவாரங்கள் அற்ற சுதந்திரமான வாழ்க்கையினை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு மண்டைதீவு புனித பேதுருவானவர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இயல்பு வாழ்க்கை வாழ இருக்கும் தடைகளை அகற்றுமாறு கோரி மண்டைதீவு புனித பேதுருவானவர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பிவைத்த மகஜரிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரால், அங்கு குடியிருக்கும் ஏறககுறைய 300 குடும்பத்தைச் சேர்ந்த 1,200 பேர் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். இவ்வகை இராணுவ நெருக்குவாரங்கள், எம்மக்களைக் கோழைத்தனமாக மனிதக் கேடயங்களாகப் பாவிக்கும் உள்நோக்கம் கொண்டவை.

அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அங்கு குடியிருப்பவர்கள் படைத்தரப்பினரிடம் பதிந்து குடியிருப்பதற்கு அனுமதி பெற்றிருக்கவேண்டும். கடற்றொழில் செய்வதற்கு நேரம் குறித்து, அனுமதிபெறவேண்டும். குடும்ப, தனிப்பட்ட முக்கிய நிகழ்வுகளுக்கு முன்கூட்டியே 15 நாள்களுக்கு முன் அனுமதி பெறவேண்டும். அனுமதிமறுக்கப்பட்டதும் உண்டு.

மண்டைதீவிற்குள் கடல்நீர் உட்புகாமல் தடுப்பதற்கு அணை ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது. மக்கள் முன்னர் குடியிருந்த வீடுகளை உடைத்து கட்டடப் பொருள்களைக் கொண்டு 22-04-2005 அன்று தமது காவலரண்களைப் பலப்படுத்தினர். பின்னர், மண் அணையை 06-05-2005 அன்று உடைத்தனர். 09-05-2005 அன்று மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்புத் தெரிவித்தபோது, மக்களைத் தாக்குவதற்குத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினர். தற்காலிகமாக வேலைகள் நிறுத்தப்பட்டாலும், மீளவும் தடுப்பு அணைகள் உடைக்கப்படலாம்.

எமது சொந்த வீடுகள் (50) அவர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளதால், நாம் அகதிகளாக ஓலைக்குடிசைகளில் வாழுகின்றோம். மேற்கூறிய காரணங்கள் மனித உரிமைகளை இழந்து சுதந்திரமற்ற வாழ்க்கையை நாம் தொடர விரும்பவில்லை.

ஸ்ரீலங்கா படைகளது இத்தகைய நெருக்குவாரங்கள் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்களாகும்.

எனவே, எமது அன்றாட வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக உள்ள உயர்பாதுகாப்பு வலயமும், ஸ்ரீலங்காப் படைகளும் அங்கிருந்து அகற்றப்படவேண்டும். நெருக்குவாரங்கள் அற்ற சுதந்திரமான வாழ்க்கையை உறுதிசெய்ய வேண்டிய கடமை தங்களுக்குமிருப்பதால் இவ்விடயங்களைத் தங்களது கவனத்திற்கும், நடவடிக்கைகளுக்கும் தருகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-204)

## தனியார் பஸ்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது நிறுத்தம்

கொழும்பு,மே13

தனியார் பஸ்களுக்கான வீதி அனுமதிப் பத்திரம் வழங்குவதை ம்று அறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனைத்து மாகாணங்களினதும் முதலமைச்சர்களைப் பணித்துள்ளார்.

பயணிகளின் நன்மைகருதி புதிய செயற்றிட்டம் ஒன்றை அரசு வகுத்து வருவதால் அது நடைமுறைக்கு வரும் வரை இந்தப் பணிப்புரை நடைமுறையில் இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

# பொறுப்பற்ற இராணுவ நடவடிக்கை தொடர்வதால் பாதுகாப்பு அமைச்சர் உடன் பதவி விலக வற்புறுத்து

## சிவநேசன் எம்.பி. அறிக்கை

இராணுவத்தினரின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. எனவே, பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி தனது அமைச்சுப் பதவியை உடன் துறக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போராலும் சுனாமியின் பாதிப்பாலும் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழ்மக்களின் வாழ்விடங்களின் வீதிகளிலும் சனநெரிசல் உள்ள பகுதியிலும் அனாவசியமான முறையில் முகாம்களையும், காவலரண்களையும் அமைத்துள்ள இராணுவம், சிங்கள அரசின் ஏவற்பேய்களாகச் செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இவர்கள் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக வந்தவர்களா? அல்லது தமிழ்மக்களைப் பாடையேற்ற வந்தவர்களா? என்பதைச் சர்வதேச சமூகம் நன்கு அறிந்துகொள்ளட்டும்.

ஏறாவூரையும் மட்டக்களப்பையும் இணைக்கும் பிரதான வீதியில் ஏன் இராணுவ முகாம்? எனக் கேட்டு அந்த இராணுவ முகாமை அகற்றும்படி மக்கள் கோரி அகிம்சைப் போர் நடத்தினார்கள் என்றால் மக்களின் பாதுகாப்பிற்கு இராணுவம் தேவையில்லை என்பதை உணர்த்தியுள்ளனர். அகிம்சைப் போருக்குக் கிடைத்த பதில் ஆயுதங்களால் கொன்றொழித்தலும் கடுமையாகத் தாக்கப்பட்டதும் மக்கள் பிரதிநிதிகளைப் பயமுறுத்தியதுமே ஆகும்.

தமிழர் பிரதேசத்தில் சி கள அரசின் பாதுகாப்புப்படை தேவை இல்லை என்பதைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் சர்வதேச சமூகத்திற்கு இச் சம்பவத்தின்மூலம் உணர்த்திக் கொள்ளவேண்டும். இந்த ஒழுங்கற்ற - கட்டுப்பாடற்ற - இராணுவ நடவடிக்கை மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதே.



மேற்படி நிகழ்வுகள் அமைதிக்கான சூழ் நிலையைப் போக்கி, மீண்டும் ஓர் அவலம் நிறைந்த இலங்கையைத் தோற்றுவதற்குச் சிங்களப் பேரினவாத சக்திகளின் திட்டமிட்ட செயலாகவே இந்நடவடிக்கையைப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்நிலை தொடருமானால் மீண்டும் போர் உருவாகுவது தவிர்க்கமுடியாததாகிவிடும். எனவே, எமது தேசியத் தலைமையின் அளவு கடந்த பொறுமையைச் சீண்டும் விதத்தில் அமைந்ததால் இலங்கை அரசின் இராணுவ அடாவடித்தன நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்விடயத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சர்வதேச சமூகத்திற்குத் தமிழ்மக்களின் உண்மையான பரிதாபமான நிலையை எடுத்துக்கூறவேண்டும் - என்றுள்ளது.

(8-70-202)



பொலிகண்டியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக் வீடு வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வடமராட்சி சுனாமி அனர்ந்த செயலணிப் பணிப்பாளர் எஸ்.பாலையா குடியிருப்பாளர் ஒருவருக்குப் புதிய வீட்டின் திறப்பினைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் நடுவில் காணப்படுகிறார்.

*(படம்: சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)*

## விக்டர் ஐவனுக்கு கொலை மிரட்டல்

பிரபல ஊடகவியலாளரும் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவனுக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.


ஊடகவியலாளர் சிவராமைக் கொலை செய்யப் போவதாகத் தெரிவித்து 'தேரபுத்தபாய' என்ற பௌத்த அமைப்பொன்றின் பேரிலேயே விக்டர் ஐவனுக்கு கொலை மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நாட்டின் இறைமைக்குக் குந்தகம் விளைவிப்போருக்கு, சிவராமுக்கு ஏற்பட்ட விளைவே ஏற்படும் எனவும் -

தனிநாட்டுக்குத் துணைபோகும் சக்திகளுக்கு வலுவூட்டும் வகையில் சிவராம் தனது எழுத்தைப் பயன்படுத்தியமைக்காகவே அவரது உயிரைத் தாம் காவுகொண்டனர் என்றும் அந்த கடிதத்தல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மிரட்டல் கடிதம் குறித்து, சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பிடம் விக்டர் ஐவன் முறைப்பாடு செய்துள்ளார். இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் புதிய இடதுசாரி முன்னணியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

(க-8)




## 'நல்லைக்குமரன்' ஆக்கங்களை அனுப்பக் கோரிக்கை

யாழ். மே.12

இவ்வருடம் வெளியிடப்படவுள்ள நல்லைக்குமரன் 13 ஆவது மலர் வெளியீட்டிற்கான ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு சைவ சமய விவகாரக்குழு கேட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு யாழ்மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வருடம் தோறும் நல்லைக் குமரன என்ற பெயரில் மலர் ஒன்றினை வெளியிட்டு வருகின்றது. இவ்வருடம் வெளியிடப்படவுள்ள மலருக்கான ஆக்கங்களைத் துறைசார் அறிஞர்கள், சைவப் பெரியோர்கள் மற்றும கல்விமான்களிடமிருந்து சைவ சமய விவகாரக்குழு எதிர்பார்க்கின்றது.

தமது ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லைக்குமரன் மலருக்கான பிரதான தொனிப் பொருள் "மாநகராட்சி மன்ற பிரதேசத் திருக்கோயில்கள்" என்பதாகும்.

மலருக்கு உகந்ததும் காலத்தின் தேவைக்கு ஏற்றதுமான தலைப்பில் ஆககங்கள் எழுதப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (8- 7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 05 06 1943

ஆண்டவன் அடியில் 13 04 2005

## அமரர் பிலுப்பையா யேசுராசா [ சந்திராசா ]

நல்லதொரு குடும்பத்தலைவனாய் - ஊரில்
நற்குணம் கொண்ட பெரியோனாய்
அன்பு என்ற சொல்லுக்கோர் இலக்கணமாய்
வாழ்ந்து எம்மையும் அவ்வழி வளர்த்து
ஆளாக்கிய ஐயாவே! நீங்கள் வாழ்ந்திட்ட
காலத்தில் கூறிய கருத்துக்களை
வாழ் நாளில் நாம் என்றும் மறவோம் ஐயா!
எத்தனை தசாப்தங்கள் கடந்தாலும்
ஆறாது எம் துயரம் ஐயா!

எமது அன்புத் தந்தையின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு பல வழிகளில் எமக்கு உதவி செய்தவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தயோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (13.05.2005) வெள்ளிக்கிழமை புனித தோமையார் ஆலயத்தில் மாலை 5 மணியளவில் நடைபெறும் திருப்பலிப் பூசையில் பங்குகொண்டு எமது தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

(C-45247)(51)

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு - கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைக்கும் திட்டம் (காப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது "ஆஅவ"கடன் இல.2043 -SRI(SF)

# கேள்வி கோரல் - இல.03

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் புனரமைக்கும் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனில் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம்(ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/ ED/22 | முல்/ புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 120'x 25'மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தை நிர்மாணித்தல். | M6 | 94000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD இல் மேற்படி M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.
   VII. கேள்வி கோருவோர் பெறுமதிசேர் வரி (VAT) பதிவுச் சான்றிதழின் நிழற்பிரதியை அல்லது நிறுவனம் பதிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் பெறுமதிசேர் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை "B"கடித உறையுடன் சமர்ப்பிக்கப்படும் ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்குப் பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு CAARP திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்டப் பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஒப்பந்த ஆவணங்களை 2005 மே 16 இலிருந்து 2005 மே 27 வரை முற்பகல் 9.30 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/- செலுத்திக் கொள்வனவு செய்யப்படலாம்.

7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2005 மே 31 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

8. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவை கீழே 9ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு உரிய இடத்தில் உரிய நேரத்துக்குள் அனுப்பப்படவேண்டும்.

9. ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த கேள்விகள், தலைவர், மாவட்ட கேள்விச் சபை, CAARP, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2005 ஜூன் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**திருமதி இமெல்டா சுகுமார்**
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.42736) (39-15-45)

# வவுனியா– காங்கேசன்துறை ரயில் தடத்தில் புதிய அதிவேகப் பாதை அமைக்கலாம்

அண்மையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் யாழ்ப்பாணத்தில் முக்கியமான வீதிகளை அகலமாக்குவது பற்றி உள்ளூர்ப்பத்திரிகையில் (உதயன்) ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். கடந்தவாரம் உதயன் மக்கள் மன்றில் முன்னாள் யாழ்.நகர பிதா திரு.நாகராசா அவர்கள் அமெரிக்காவில் ஜோர்சி மாநிலத்தில் இருந்து வீதி அகலப்படுத்துவது தொடர்பாக தனது கருத்துகளைத் தெரியப்படுத்தியிருந்தார். பிற நாடுகளில் வாழ்ந்தாலும் பிறந்து, வளர்ந்த மண்ணில் நடைமுறைப்படுத்த இருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களில் அக்கறையாக இருப்பதுடன், அது பற்றிய கருத்துகளை பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் பாராட்டப் படவேண்டிய விடயம். வீதி அகலப்படுத்தப்படும திட்டம் தொடர்பாக என் கருத்துகளையும் இங்கே தெரிவிக்கலாம் என்று கருதியே இதனை எழுதுகின்றேன்.

### முதலில் ஆய்வு அவசியம்

இடை மோதல்கள் உருவாகுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறைத் துறைமுகம், பலாலி விமானத்தளம், சிமெந்து ஆலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, செம்மண் பிரதேசத்தில் விவசாய விருத்தி போன்ற முக்கிய பொருளாதார மையங்கள் இருந்தன. இவற்றின் விருத்தியின் விளைவாக வாகனப் போக்குவரத்தில் பாரிய, கனரக வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் பயன்படுத்தவேண்டி ஏற்படலாம். இதன்பொருட்டு பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி போன்றவை அகலப்படுத்தப்படுவதற்கான தேவை ஏற்படும் என்ற கருத்து நிலவியது. இன்று இந்த பொருளாதார மையங்களெல்லாம் செயலிழந்து போய்விட்டன. எனவே, வீதி அகலப்படுத்தப்படுவதற்கான தேவை என்ன? என்ற கேள்வி எழுவதுடன், இந்தத் தேவைபற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? ஆய்வின் விவரங்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டதா? என்ற கேள்விகளும் எழுகின்றன. இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே பிரதான வீதிகளை அகலப்படுத்துவதற்கான தேவை என்ன என்பதை மக்கள் அறியக்கூடியதாக இருக்கும். அத்துடன் மாற்றுவழிகள் ஏதாவது உண்டா என்பதனையும் ஆராய முடியும். திரு.நாகராசா அவர்கள் குறிப்பிட்டது போல் முக்கிய வீதிகளை அகலப்படுத்துவது என்பது எத்தனையோ கோடி ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு அழிவை ஏற்படுத்தும். இதுகூட இன்னும் மதிப்பிடப்படவில்லை. இந்தச் செலவுகள் அரச மதிப்பீடுகள் என்ற வகையிலும், சந்தைப்பெறுமதி அடிப்படையிலும் செய்யப்படுதல் வேண்டும். அப்பொழுது தான் மக்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்குவது சாத்தியமாகும். இந்த நஷ்டஈட்டுத் தொகையும செயற்றிட்டச் செலவுகளில் அடக்கப்படல் வேண்டும். இவ்வாறு மதிப்பிட்டாலும் சில சொத்துகளுக்கு பண ரீதியான மதிப்பீடு பொருத்தமுடையதாகாது. உதாரணமாக, ஒரு சரித்திரப்புகழ் பெற்ற பழைய கோவிலை இடிக்கின்றோம். அதற்கான பொருளாதார மதிப்பீடு மிகவும் குறைவானதாகும். ஆனால் அதற்குரிய சமூக கலாசார மதிப்பீடு அளவிட முடியாதது என்பதை உணரவேண்டும். இந்த வீதி அகலப்படுத்தும் திட்டம் தொடர்பாக எவ்வித ஆய்வறிககைகளும் இதுவரை தயாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் மாவட்டச் செயலரின் அறிக்கை குறிப்பிட்ட வீதியோரங்களில் வதிவிடங்களைக் கொண்ட மக்கள் மத்தியில் அச்சத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

### வாகனங்களின் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. வாகனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு ஒருபுறம், இதற்கேற்ப வீதிகள் அகலமில்லாமை, வீதிகள் ஒழுங்கில்லாமை போன்ற காரணங்கள் மறுபுறம். இதனாலேயே வாகன விபத்துகளும், விபத்துமரணங்களும் ஏற்படுகின்றன என்று வாதிட்டால் அது ஏற்கக்கூடிய காரணமல்ல. விபத்துகளைத் தடுக்கவேண்டும் அல்லது குறைக்கவேண்டும் என்பதில் வேறுபட்ட கருத்துகள் இல்லை. ஆனால், அதற்கு வீதிகளை அகலப்படுத்துவது தான் தீர்வு என்பதல்ல. விபத்துகளையும், அதனோடு தொடர்புபட்ட மரணங்களையும் தடுப்பதற்கு முதலில் மாற்றுவழிகளை நாம் சிந்திக்க வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இம்மாற்று வழிகள் மிகவும் செலவு குறைந்தவை. சரியாக நடைமுறைப்படுத்தினால் அதிக வினைத்திறனுடையவை.




தற்போது யாழ்.மாவட்டத்தில் கொழும்பு மாநகரத்தில் உள்ளது போன்ற வாகன நெரிசல் மைல், நீளத்திற்கு இல்லை. நகரின் சுற்றுவட்டத்திற்குள் தான் அதுவும் ஒரு சில மணித்தியாலங்களுக்கு மட்டுமே வாகனநெரிசல் காணப்படுகின்றது.

இவ்வாகன நெரிசலைப் பல்வேறு விதமான போக்குவரத்து முகாமைத்துவ வழிமுறைகளில குறைக்கலாம். வீதிகளை ஒருவழிப்பாதையாக மாற்றுவது, வாகனத்தரிப்பிற்குத் தடைவிதித்தல், வாகனத்தரிப்பிற்கு ஏற்ற இடங்களைத் தெரிவுசெய்து வசதிசெய்தல், மெதுவாக ஊர்ந்து செல்லும் வாகனங்களுக்கு குறித்த நேரத்தில் நகரினுள் உட்புகத் தடை விதித்தல், கடைகள், விற்பனை நிலையங்கள் உள்ள பகுதிகளில் வாகனங்களை முற்றாகத் தடை செய்து பாதசாரிகளை மட்டும் செல்வதற்கு அனுமதித்தல் போன்ற இன்னோரன்ன வழிகளில் நகரத்தில் ஏற்படும் வாகன நெரிசல்களைத் தவிர்க்கலாம்.

### வீதி ஒழுங்கு பேணல்

புறநகர்ப்பகுதியில் ஏற்படும் விபத்துகளுக்கு முக்கிய காரணங்கள் மக்களுக்கு வீதி ஒழுங்கு முறைகள் பற்றிய அறிவின்மை, சாரதிகளுக்கு உத்தரவாதப்பத்திரமின்மை, சாரதிகள் வீதி நெறிமுறைகளைப் பின்பற்றாமை, அதிவேகத்தில் வாகனங்களைச் செலுத்துதல், தனியார் துறை வாகனங்கள் வீதியில் வாகனத்தரிப்பிடமில்லாத இடங்களில் வாகனங்களை தரித்து நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கல், வாகனங்கள் வீதியில் ஓடுவதற்கான தகுதியின்மை (முன் விளக்குகள், சைகை விளக்குகள் செயற்படாத நிலையில் வாகனங்கள் வீதியில் செல்லல்) போன்றவையாகும்.

போக்குவரத்துப் பொலீஸார், சாரதிகள், பொதுமக்கள் போன்றவர்கள் கவனமெடுக்கும் பட்சத்தில் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம். போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தல், இப்பிரதான வீதிகளில் வேக எல்லைகள் பொருத்தப்பட்டு வாகனங்களின் வேகங்கள் கண்காணிககப்படல் வேண்டும். குறிப்பாக புறநகர்ப்பகுதியில் பிரதான வீதிகளில் கண்காணிப்பு இடம் பெறல் வேண்டும். வீதிகளில் விபத்துக்கள் ஏற்பட்டால் பொதுமக்கள் ஆவேசம் கொண்டு தாமே சட்டத்தைக் கையில் எடுப்பதைத் தடுத்து அதற்கான காரணங்களைக் கண்டறிதல வேணடும். வாகனங்களை உடைத்து நொருக்கித் தீ வைப்பதனால் எந்தப் பயனும் இல்லை. இதே போன்று மற்றுமொரு விபத்து நடைபெறாமல் தடுப்பதும் சாத்தியமில்லை. ஒவ்வொரு விபத்தும் உரிய முறையில் ஆராயப்படும்போது இன்னொரு விபத்து நடைபெறாமல் தடுக்க வழி பிறக்கும்.

இத்தனை மாற்று வழிகள் இருக்கும்போது வீதிகளை அகலப்படுத்தும் செயற்றிட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்து மேலும் விபத துகள் அதிகரிக்கவே இடமளிக்கும். வீதி ஒழுங்கைப் பின்பற்றாது சாரதிகளுக்கு அகலப்படுத்தப்பட்ட சீர்மையான வீதி மேலும் வேகமாக வாகனங்களை ஓட்டவே தூண்டுதலாக அமையும். இதனால், மேலும் மோசமான விபத்துகளும் இறப்புகளுமே சாத்தியமாகும். பல ஆய்வுகளில மூன்றாம் உலக நாடுகளில் நல்ல வீதிகள் விபத்துகள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்ததை அறியக்கூடியதாகவுள்ளது.

விபத்துகளைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் செலவுகுறைந்த மேற்கூறிய வழிமுறைகளை முதலில் நேர்மையாக நடைமுறைப்படுத்தி பெறுபேறுகளை ஆராய வேண்டும். பெறுபேறுகள் சாதகமாக இருப்பின் இந்நடைமுறைகளை மேலும் விஸ்தரிக்கலாம். இந்த வழிமுறைகளை எல்லாம் அறிமுகம் செய்த பின்னரும் வீதியை அகலப்படுத்துவதற்கான தேவை இருப்பின் உரிய சாத்தியப்பாட்டு ஆய்வுகளை நடத்தி பாதிப்பிற்குள்ளாகின்ற மக்களுக்கு இதுபற்றிய அறிவூட்டலைச் செய்து, செயற்றிட்டத்தினால் குடாநாட்டிற்குக் கிடைக்கக்கூடிய நலன்களுடன் ஒப்பிடும்போது பாதிப்பிற்குள்ளாகின்ற மக்களுக்கான செலவுகள், இழப்புகள் குறைவு என்பதனை விஞ்ஞான ரீதியாக எடுத்துக்காட்டி மக்களது சம்மதத்துடன் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதைவிடுத்து பல்நாட்டு நிதி நிறுவனங்களின் நிதி உதவி கிடைக்கின்றது என்பதற்காக மக்கள் விரும்பாத செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது.

### ரயில் சேவை சாத்தியமில்லை

என்னுடைய கருத்தில் வவுனியா -காங்கேசன்துறை இடையிலான புகையிரதப்பாதை மீண்டும் அமைப்பது என்பது இனிமேல் சாத்தியமில்லை. ஏனெனில், இப்பாதையினை நிர்மாணிக்கும் பொழுது நவீன அதிவேகப் புகையிரதப்பாதையாக நிர்மாணிப்பதே பொருத்தமாகும். அத்தகைய பாதை வவுனியா - காங்கேசன்துறைக்கிடையில் மட்டும் அமைவது பொருத்தமில்லை. அதேசமயம் கொழும்பு- காங்கேசன்துறை வரையும் பாதை அமைத்து நவீன அதிவேக புகையிரதத்தை இயக்குவதும் சாத்தியமில்லை. எனவே, புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான நிலத்தில் புதியதொரு அகலப்பாதை அமைத்து இதனூடாக போக்குவரத்தைத் திசை திருப்புவதன் மூலம் பலாலி வீதி - காங்கேசன்துறை வீதிகளில் வாகன நெரிசலைக் குறைக்கலாம். அத்துடன் இந்த அரச காணியில் பல இடங்களில் அத்துமீறல்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைத் தடுக்காமல் அரச இயந்திரம் இருப்பது வியப்பிற்குரியது. காலப்போக்கில் இந்த அரச நிலத்தினூடாகவும் ஓர் பாதை அமைப்பதோ அல்லது புகையிரதப்பாதை அமைப்பதோ சாத்தியப்படாத நிலை தோன்றலாம். பல அத்துமீறல் கட்டடங்கள், கோயில்கள் என்பவற்றை உடைக்க வேணடியிருக்கும். அரசுக்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறிக் குடியேறும்போது பாராமுகமாக இருந்துவிட்டு கட்டடங்கள் கட்டிய பின்னர் உடைப்பது என்பது அரிதான வளங்களை வீணடிக்கும் செயற்பாடாகும். வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையான ஒரு புதிய அதிவேக போக்குவரத்துத் தரைப்பாதை அல்லது யாழ்.குடாநாட்டில் யாழ்ப்பாண நகரிலிருந்து பலாலி வீதி, காங்கேசன்துறை வீதிக்கிடையில் மற்றுமொரு புதிய வீதி அமைப்பது தற்போதைய பிரதான வீதிகளை அகலப்படுத்துவதற்கு ஏற்படும் செலவை விட குறைந்த செலவில் செய்யக்கூடிய ஒரு செயற்றிட்டமாகும். அத்துடன், இதை ஒரு மாற்றுவழியாக ஆராய்வதும் பொருத்தமாகும். ☆

திரு.இ.நந்தகுமாரன்
பீடாதிபதி, வியாபாரக் கற்கைகள் பீடம்,
வவுனியா வளாகம்

---

# தெற்கின் இனக்குரூரம் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது

### மட்டக்களப்புச் சம்பவம் குறித்து பத்மினி சிதம்பரநாதன்

யாழ்ப்பாணம்,மே13

மட்டக்களப்பு சந்திவெளியில் பொதுமக்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதல் தெற்கின் இனக் குரூரத்தை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

மட்டக்களப்புச் சம்பவம் தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்புச் சந்திவெளியில் மக்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து குரலெழுப்பியபோது இராணுவம் மக்களைத் தாக்கியது. ஒருவர் கொல்லப்பட்டும், 25 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

தெற்கு மீண்டும் ஒருமுறை தனது இனக் குரூரத்தை வெளிக்காட்டியுள்ளது. இதனை உலகம் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று தமிழ்த் தேசியத்தின் நியாயப்பாடு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்த்தேசியத்தின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் உலகத் தலைநகர்களில் வரவேறகப்படுகிறார்கள். தமிழ்த் தேசியத்திற்கு அங்ககாரம் படிப்படியாக வளர்ந்து வருகின்றது.

இத்தகைய பின்னணியில் சிங்கள இனவாதம் தீவிரவெறி கொண்டு செயற்பட்டு வருவது நாம் அறிந்ததே. தமிழர்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கக் கூடாது. அதாவது, மனிதாபிமான உதவிகளைக் கூடக் கொடுக்கக்கூடாது என்று கூக்குரலிடும் அளவுக்கு, அந்தக் கூக்குரலை புத்தபிக்குகளே வெளிப்படுத்தும் அளவுக்கு இன வெறி தலைகால் தெரியாமல் வெளிப்படுகின்றது.

மறுபுறத்தில் சாதாரண தமிழ் மக்களையும் தமிழ்ப் பிரமுகர்களையும் கொலை செய்யும் அளவுக்கு இந்த இனவெறிக் குரூரம் வெளிப்பட்டு வருகின்றது. சர்வதேச சமூகம் இத்தகைய இனவாதப் போக்கைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

உலகில், உலக சமாதானத்திற்கு எதிராக உள்ள இத்தகைய நச்சு இனவாத குரூரத்தை இல்லாது ஒழிக்க முழுமூச்சுடன் செயற்படுவதற்குக் கரம் கோர்க்கவேண்டும்.

---

# திரைப்படக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 13

இலங்கைத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த தமிழ் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு மகாவலி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சினிமாச் சொற்பொழிவும் 'நல்ல திரைப்படத்தின் அணுகுமுறை' என்னும் தலைப்பிலான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளன. (ஐ-202)

---

### வலிகாமம் தென்மேற்குப் பகுதியின்

# அபிவிருத்தித் திட்டங்களுக்காக 14 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே13

2005ஆம் ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு 14 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி (CBG), குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதி (PSDG) ஆகியவற்றின் கீழ் 6 வேலைத்திட்டங்களுக்கான நிதியினை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.சபாபதிப்பிள்ளை ஒதுக்கீடு செய்துள்ளார்.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் வருமாறு:

✢ நவாலி வடக்கு, குதனை வீதி மீள்புனரமைப்பு.

✢ நவாலி பழைய இறங்குதுறை கொல்களம் புனரமைப்பு.

✢ நவாலி சென்.பீற்றர்ஸ் வீதி மீள் புனரமைப்பு.

பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் வருமாறு:

✢ ஆனைக்கோட்டை பொதுநூலகம் மீள் புனரமைப்பு.

✢ மானிப்பாய் பட்டினம் உப அலுவலகம் மீள்புனரமைப்பு.

✢ இளவாலை - முள்ளானை கலைவாணி சனசமூக நிலையம் மீள்புனரமைப்பு.

மேற்படி புனரமைப்பு வேலைகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

(ஐ-185)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசித்திங்கள் முதலாம் நாள் (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 8.53 மணிமுதல் 10.23 மணி வரையுள்ள ஆயிலிய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புதல்வன் திருநிறைசெல்வன்
**மகேஸ்வரன்**
(மகேஸ்)
அவர்களுக்கும்

எமது புதல்வி திருநிறைசெல்வி
**துஷ்யந்தி**
(துஷி)
அவர்களுக்கும்

சந்நிதி முருகன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
(இரு வீட்டார் அழைப்பு)

**திரு.திருமதி தனேந்திரன்**
3 ஆம் சந்தி,
கெருடாவில்,
தொண்டைமானாறு.

**திரு.திருமதி இராமச்சந்திரன், தயாபரன்**
கொத்தியகாடு, கெருடாவில்,
தொண்டைமானாறு.



## திருமணக்கார் வாடகைக்கு
குளிரூட்டியது
(திருமண,விசேட, சுற்றுலா வைபவங்களுக்கு)
**சிவா வீடியோ லைபிறறி**
இராமலிங்கம் வீதி, முடமாவடி
(பூங்கனிச்சோலை அருகில்)







சர்வதேச வாழும்கலை அறநிறுவனம்
உங்களை வரவேற்கிறது...
உலகப் பிரசித்திபெற்ற ஆன்மீகக் குருவும்
வாழும் கலை நிறுவனருமான
**பரமபூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி**
அவர்களின்
49 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, சர்வதேச வாழும்கலை அறநிறுவனம் நடத்தும்

## ஆன்மீகத் திருவிழா

தெய்வீக இன்னிசை, ஞானம், தியானம் மற்றும் அற்புத சுகமளிக்கும் பிரார்த்தனைகள் ஆகியவை சங்கமிக்கும் ஓர் இனிய மாலைப்பொழுது.
நிகழ்ச்சிக்கு வருகை தந்து அற்புத ஆனந்தத்தில் திளைக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்.நகரம்**
**நாள்: 13.05.2005 வெள்ளிக்கிழமை**
**நேரம்: மாலை 4 மணிமுதல் 6.30 மணிவரை...**
(புதிய நேரம்) (45183)

குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் அருளுரைகள் அடங்கிய புத்தகங்கள், ஒலிநாடாக்கள் அரங்கில் விற்கப்படும்.

அனைவரும் வருக!
தெய்வீக அருள் பெறுக!!
**அனுமதி இலவசம்**


## பரிசுத்த ஆவி திருவிழா

யாழ்ப்பாணம்,மே 13

மருதனார்மடம் கிறிஸ்தவ சேவஆச்சிரமம் நடத்தும் பரிசுத்த ஆவி திருவிழா இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 5 மணிக்கு நற்செய்திக் கூட்டமும் நாளை காலை 7.30 மணி முதல் வழிபாடு, தியானம் கூட்டம் என்பனவும் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளன. (8-202)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே 13

யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேற்று வியாழக்கிழமை ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் க.சிவஸ்ரீசாந்தி நாயகன் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதே இடத்தில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-202)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே13

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீக நிகழ்வின் 127 ஆவது தொடர் இன்று நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்' என்னும் தலைப்பில் நித்திய தசீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (8-202)

## பொது அறிவு வினாடிவினாப் போட்டி

யாழ்ப்பாணம்,மே13

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸின் ஆதரவுடன் யாழ. பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம் உயர்தர பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவு வினாடிவினாப் போட்டியை நடத்தவுள்ளது.

போட்டிகள் வலயங்களூடாக நடத்தப்பட்டு இறுதிப் போட்டி யாழ்பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளில் முதலாவதாக, யாழ்.கல்வி வலயத்தின போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன. (8-202)

## முன்பள்ளி ஆசிரியருக்கான வதிவிடப் பயிற்சி

வலி.தெற்கு,மே13

உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட வதிவிடப் பயிற்சிகள் இம்மாதம் 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

சுன்னாகம் கிழக்கு சிவன் முன்பள்ளியில் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்காக உடுவில் பிரதேசத்துக்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக உடுவில் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (8-152)


**G.C.E.A/L 2005**
2005 A/L பரீட்சைக்குரிய பொது அறிவு, பொது ஆங்கிலம் வெளிவந்துவிட்டது!
வெளியீடு: **உயர்கல்விச்சேவை நிலையம்.**
சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.



**e-quals examination** City & Guilds

London City @ Guilds நிறுவனத்தினால் நடாத்தப்படும் மேற்படி பரீட்சையானது முதற் தடவையாக யாழ் நகரில் நடாத்தப்படவுள்ளது. இப்பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேரசூசி பின்வருமாறு.

Date :28-05-2005
Time :10.00 - 12.00
Venue : Technical College

இதுவரை விண்ணப்பியாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்

*For further details*
Principal or Director
Kokuvil Technical College STP
Jaffna Jaffna



# சேரன் வாணிபம்
சேரன்

அன்றும் இன்றும் என்றும்
யாழ் மக்களின் மனதில்
நீங்காத இடம் பிடித்த
சேரன் வாணிபத்தின்
மற்றுமோர் ஆக்கம்

## "சேரன் அரிசி மா"

சிறந்த தரம்! குறைந்த விலை!!



இலகுவான செய்முறை
புதுமத் தொழில்நுட்ப முறையில் தூய்மையாக
ஆக்கப்பட்ட சேரன் அரிசி மாவை எங்கும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த விலை - 33/50 சில்லறை விலை - 36/-

தொலைபேசி: 021-222 5874, 021-228 5770-71

# லெப்.கேணல் கௌசல்யன் நினைவாக நடமாடும் மருத்துவ சேவை ஆரம்பம்

கிளிநொச்சி,மே13

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் லெப்.கேணல் கௌசல்யன் நினைவாக நடமாடும் சிறப்பு மருத்துவ சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பணிப்புக்கு அமைய தமிழர் தாயகத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் இந்தச் சிறப்பு மருத்துவப் பிரிவினர் சேவையாற்றவுள்ளனர்.

இதன் ஆரம்பநாள் நிகழ்வுகள் கடந்த 10 ஆம் திகதி காலை 8.15 மணிக்கு வேரவில் வைத்தியசாலை முன்றிலில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

பொதுச்சுடரை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை வைத்திய கலாநிதி ஓவியன் ஏற்றினார்.

வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் மற்றும் தேவா ஆகியோர் லெப்.கேணல் கௌசல்யனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்தனர்.

தமிழீழ சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன், மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் அருந்தா, களமருத்துவப் பொறுப்பாளர் மனோச் ஆகியோர் கௌசல்யனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்தனர். வைத்திய கலாநிதி ஓவியன் சிறப்புரையாற்றினார்.

முதற்கட்ட மருத்துவ சேவை வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி, கீரிக்குடா, கிராஞ்சி, பிருந்தாவனம் ஆகிய பிரதேச மக்களின் நலன்கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வேரவிலில் நடைபெற்ற இரண்டாம் நாள் மருத்துவ முகாமில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இருநாள் சிகிச்சை முகாமிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(கு)

## கிளிநொச்சி திருநகர் வடக்குக் கிராமம் அபிவிருத்தி

கிளிநொச்சி, திருநகர் வடக்குக் கிராமத்தின் அபிவிருத்திக்காக ஜப்பான் அரசு சுமார் 20 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இம்மாதம் தொடக்கம் எதிர்வரும் 6 மாதங்களுக்குள் இந்நிதி மூலம் மேற்படி கிராமத்தின் சமூகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை - சர்வோதயமும் கிளிநொச்சி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து மேற்படி கிராமத்தில் முன்பள்ளி ஒன்றையும் அமைக்கவுள்ளன. (8-301-202)

# சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்த கிராமிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

கிளிநொச்சி,மே13

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி, சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 187 பயனாளிகளுக்கு 73 லட்சத்து 13 ஆயிரத்து 403 ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது.


விவசாயக் கடனாக 31 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் - சுயதொழில் கடனாக 102 பயனாளிகளுக்கு 39 லட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாவும் - தொழில் மேம்பாட்டுக் கடனாக 9 பயனாளிகளுக்கு 11 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாவும் - சோலர் கடனாக 30 பயனாளிகளுக்கு 12 லட்சத்து 24 ஆயிரத்து 103 ரூபாவும் - வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய கடனாக 15 பயனாளிகளுக்கு 6 லட்சத்து 20 ஆயிரத்து 300 ரூபா மேற்படி வங்கியால் கடந்த மாதத்தில் கடனாக வழங்கப்பட்டுள்ளதாகப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

(8-202)

# கால்நடை வளர்ப்போர் சங்கங்கள் விரைவில் புனரமைக்கப்பட வேண்டும்

## பொருண்மியப் பொறுப்பாளர் கருத்து



கிளிநொச்சி,மே13

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கால்நடை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நிறுவன நடுவப் பணியகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தலைமை தாங்கி உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துறைசார் திணைக்கள உத்தியோகத்தர்கள் மக்களின் அடிமட்டப் பிரச்சினையை இனங்கண்டு அதற்கான ஆலோசனைகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக செயலற்றிருக்கும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைத்து கால்நடை வளர்ப்போரின தேவைகளை இச்சங்கங்கள் ஊடாக நெறிப்படுத்த கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்கள் முழுமையாகச் செயற்படவேண்டும்.

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் சேவையை அபிவிருத்தி செய்வதற்குக் கால்நடை வைத்திய நிலையங்களுக்கென இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படுகின்ற கன்றுகள், குட்டிகளை இனங்கண்டு அவற்றை ஆவணப்படுத்தி, அவை அழிந்து போகாமல் சிறந்த முறையில் வளர்ப்பதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் பிரசார நடவடிக்கைகளை கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்கள் மேற்கொள்வேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க அல்லது நிறுவ ஜூன் 15 தொடக்கம் ஜூலை 15 வரைகாலக்கெடு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கால்நடைகளின் புள்ளி விவரங்களைக் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்கள் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கிடையில் முழுமையாகத் திரட்டவேண்டும் என்றும் நிறுவனம் அதற்கு வேண்டிய ஆதரவை வழங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (8-202)

## வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்கு கடனுதவி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கிராமிய அபிவிருத்தி நிறுவனம் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்கான கடன்களை வழங்கிவருகின்றது.

அக்கராயன், கோணாவில் பிரதேசத்தில் கடன்வழங்கும் நிகழ்வு அண்மையில் மேற்படி இடத்தில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்றது.

நிறுவனத் தலைவர் ராமச்சந்திரன் தலைமையில்இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் தசவர்ணன், அக்கராயன் பிரதேசப் பொறுப்பாளர் திருமாவளவன உட்படப் பலர் கருத்துரைகள் நிகழ்த்தினர்.

இதேவேளை -

பூனியன்குளம், காந்தி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபா கடனை மேற்படி நிறுவனம் வழங்கியுள்ளதோடு, 3 நீர் இறைக்கும் இயந்திரங்களையும் கடனடிப்படையில் வழங்கியுள்ளது.

(8-202)




# வவுனியா முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இது மேற்கொள்ளப்பட்டது.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள முன்பள்ளிகளின் அபிவிருத்திக்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியின்மூலம் இந்தத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வவுனியா சித்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், விநோ நோதராதலிங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி மற்றும் பிரதேச, வலய, மாவட்ட முன்பள்ளிக் கட்டமைப்பு உறுப்பினர்கள், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர், கிராம அமைப்புக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரால் ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான 16 அலுமாரிகள், 15 கதிரைகள் ஆகியவை பிரதேச கட்டமைப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

இதற்கிடையில், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளரால் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலக நிதியிலிருந்து பிரதேச மட்ட கட்டமைப்புக்களின் வங்கிச் செயற்பாடுகளை வலுவுடன் இயங்கவைக்கும் நோக்குடன் மூவின மக்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட ஐந்து முன்பள்ளிக் கட்டமைப்புக்களிடம் தலா ஐயாயிரம் ரூபா ரொக்கப் பணமாகவும் வழங்கப்பட்டுள்ளது. (8)

# வெலிக்கண்டல் வெளியில் நெற்செய்கைக்கு அனுமதி இல்லை?

## நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெளிவுபடுத்துகிறார்

கிளிநொச்சி,மே13

கண்டாவளை வெலிக்கண்டல் வெளியில் 'சிறுபோக நெற்செய்கை'க்கு அனுமதி என்னும் தலைப்பில் கடந்த 4ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் வன்னிச் செய்திகள் பக்கத்தில் வெளியான செய்திக்கு கிளிநொச்சிப் பிரிவின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந.கந்தசாமி - மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள மறுப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் நீரின் கொள்ளளவு கூடியுள்ளது. இதனால் சிறுபோக நெற்செய்கை கூடுதலாகச் செய்யலாம். எனினும், வெலிக்கண்டல் வெளியில் சிறுபோக நெற்செய்கையை நீர்ப்பாசனத் திணைக்களம் சிபார்சு செய்யவில்லை.

கடந்த மாதம் 28 ஆம் திகதி கிளிநொச்சி அரச அதிபரின் விசேட கலந்துரையாடலின்போது மேலதிக நீரைக்கொண்டு இடதுகரையில் அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் உப உணவு செய்வதென்றும் வெலிக்கண்டல் வெளியில் எதுவித வேளாண்மையும் செய்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

(ஐ-202)

# நடமாடும் சேவை நிறுத்தம்! நடந்துவந்த மக்கள் அலைச்சல்!!

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பிரதேசங்களில் கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடமாடும் சேவை திடீரென நிறுத்தப்பட்டது.

இதனால், இந்த நடமாடும் சேவைகளில் கலந்துகொண்டு பயன்பெறுவதற்கு நீண்டதூரத்திலிருந்து கால்நடையாக வருகைதந்த மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டைகள், பிறப்பு, இறப்புச் சான்றிதழ் மற்றும் வாகன ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

வேறு பல பிரச்சினைகளுக்கும் இதில் உடனுக்குடன் தீர்வுகாணப்படும் எனவும் முல்லைத்தீவு செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த நடமாடும் சேவை நிறுத்தப்படுவதாகத் திடீரென அறிவிக்கப்பட்டது.

நடமாடும் சேவை நிறுத்தப்பட்டதை அறியாத மக்கள் நீண்டதூரங்களில் இருந்துவந்து ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

போக்குவரத்து வசதிகள் ஏதுமற்ற பகுதிகளிலிருந்து பலத்த சிரமங்களுக்கு மத்தியில் நடந்துவந்து பெரும் அலைச்சலுடன் திரும்பிச் சென்றனர். (த-353)

# வடமராட்சி கிழக்கில் தொழில்நுட்பக் கல்லூரி

கிளிநொச்சி,மே13

மருதங்கேணியில் அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கில் யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளவும் நிர்மாணிப்பதற்காக டபிள்யூ.யூ.எஸ்.சி. நிறுவனத்தின் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தால் தொழில்நுட்பக் கல்லூரிக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் இ.ஜெயமயூரன் தலைமையில் இடம்பெற்ற இந்த அடிக்கல் நாட்டும் வைபவத்தில் தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஏற்றினார்.

கட்டடத்திற்கான அடிக்கல்லை டபிள்யூ.யூ.எஸ்.சி. நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் போல் டேவிட்சன், மருதங்கேணிப் பிரதேச செயலர், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர், டபிள்யூ.யூ.எஸ்.சி. நிறுவன வடமாகாணப் பணிப்பாளர் ஜெயவீரசிங்கம், பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

(8-202)

## வாய்க்கால்களில் நீர் வழங்கப்படமாட்டாது

இரணைமடுத் திட்டம் இடதுகரை 3 ஆம் வாய்க்கால் உட்பட சகல கிளை வாய்க்கால்களிலும் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதிக்குப் பின் நீர் வழங்கப்படமாட்டாது என்று கிளிநொச்சிப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந.கந்தசாமி அறிவித்துள்ளார்.

சிறுபோகக் கூட்டத் தீர்மானத்திற்கமையவும் நியாப் II திட்ட கட்டுமானப் பணிகளுக்காகவும் நீர் வழங்கப்படமாட்டாது என்றும் இடதுகரையில் இது கட்டாயமாக அமுல்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8-202)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

CD டெக் செற்றும், லவ்பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு நேரில் வரவும். தொடர்பு: சி.மணிவண்ணன், அம்மன் வீதி, தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு.T.P. 021 222 7015(சி-42791)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36வயதுடைய, செவ்வாய் 8இல் திருவோண நட்சத்திரம், பட்டதாரி ஆசிரியருக்கு தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இலக்கம் 2587, C/o உதயன், யாழ்ப்பாணம். (45283)

## தவறிவிட்டது

ஆவரங்கால் சிவன் வீதியைச் சேர்ந்த மாணிக்கம் கவேந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் வன்னி அனுமதி அட்டையும் 08.05.05 ஞாயிற்றுக்கிழமை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (45263)

## கட்டடத் தொழிலாளி காயம்

கட்டட சார மரம் முறிந்ததில் தொழிலாளி வீழ்ந்து காயமடைந்தார்.கடந்த 10ஆம் திகதி சரசாலை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தவநேசன் (வயது 45) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (8-117)

## விறுவிறுப்பான விற்பனையில்

சி.வித்தியாதரன் எழுதிய சதுரங்கத்தில் இறுதியாட்டம் நூல் விறுவிறுப்பாக விற்பனையாகின்றது. சொற்ப பிரதிகளே உள்ளன. மாவட்ட, தேசிய சதுரங்கப் போட்டிகளில் விளையாடுவோருக்கு பயனுள்ள நூல். விலை ரூபா 200 மாணவருக்கு விலை ரூபா 170. சதுரங்க வகுப்பு நடைபெறுகின்றது. தொடர்பு GKC Academy இல.25, வைமன் வீதி, நல்லூர். (45276)(29)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திரீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி-42495)

**வாழ்க்கையாளர்களே...**

பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

**மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்**

62/16, ஸ்ரான்லி வீதி, (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம். 0714168475

யாழ். வீதி, மானிப்பாய். T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com

(C-42566) (54-15)

---

உ

## பார்த்தீப வருஷ மகோற்சவம் - 2005

**கொழும்புத்துறை மேற்கு திருவருள் வதிரீபீட மன்றுளாடும் பெருமான் விநாயகர் தேவஸ்தானம்**

| | |
|---|---|
| 14-05-2005 | (நாளை) சனிக்கிழமை துவஜாரோகணம் (கொடியேற்றம்) 10.30 மணி |
| 22-05-2005 | ஞாயிறு தேர் உற்சவம் காலை 7 மணி |
| 23-05-2005 | திங்கள் தீர்த்த உற்சவம் காலை 9.30 மணி |

மஹோற்சவ குரு:
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவகுருமணி
(தேவகான பூஷணம்)
கோண்டாவில்.

ஆலய குரு:
பிரம்மஸ்ரீ
ம.பாலகிருஷ்ண குருமணி

தேவஸ்தான அறங்காவலரும், சபையினரும்.

(45129)(21-11-45)

---

## வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடம்

**பிரபல்யமான காப்புறுதி நிறுவனத்திற்கு பின்வரும் பிரதேசங்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன**

| | | |
|---|---|---|
| ☞ அராலி | ☞ உடுவில் | ☞ நெல்லியடி |
| ☞ வட்டுக்கோட்டை | ☞ பண்டத்தரிப்பு | ☞ சாவகச்சேரி |
| ☞ சுழிபுரம் | ☞ மானிப்பாய் | ☞ கொடிகாமம் |
| ☞ காரைநகர் | ☞ சுன்னாகம் | ☞ பருத்தித்துறை |
| ☞ சங்கானை | ☞ தெல்லிப்பழை | ☞ கரவெட்டி |
| ☞ சண்டிலிப்பாய் | ☞ யாழ்ப்பாணம் | ☞ வல்வெட்டித்துறை |

தகைமை:
G.C.E. O/L , (G.C.E. A/L விரும்பத்தக்கது)

வயதெல்லை:
19 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும்.

விண்ணப்ப முடிவு திகதி: **20-05-2005**

குறிப்பு: பகுதி நேரமாகவும் செய்யலாம்.

விண்ணப்ப முகவரி:
**விள.இல. 2586**
(45284) மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(21-11-45)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### தேவராசா சாம்சன்

அன்னை மடியில் 05-01-1979 — இறைவன் பாதத்தில் 13-05-2002



என்றும் நீங்கா நினைவுகளுடன்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

தேவராசா (அப்பா)
[வைத்தியர்].

இரண்டாம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(45281)(32-11-45-21)

---

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

### மருதனார்மடம், சுன்னாகம்

## பரிசுத்த ஆவியரின் திருவிழா

**பரிசுத்த ஆவியரின் பெருவிழாவை முன்னிட்டு மே 13 ஆம், 14 ஆம் திகதிகளில் பெந்தேகொஸ்தே விழா நடைபெறும்.**

**13-05- 2005 வெள்ளி**

✦ மாலை 5 மணி நற்செய்திக் கூட்டம்

**14-05- 2005 சனி**

| | | |
|---|---|---|
| ✦ காலை | 7.30 மணி | திருவிருந்து வழிபாடு |
| ✦ காலை | 9.00 மணி | காலை உணவு |
| ✦ காலை | 9.30 மணி | விவிலிய ஆய்வு |
| ✦ காலை | 11.00 மணி | தேநீர் இடைவேளை |
| ✦ காலை | 11.30 மணி | அமைதித் தியானம் |
| ✦ மதியம் | 12.00 மணி | மன்றாட்டு |
| ✦ பிற்பகல் | 12.30 மணி | மதிய உணவு |
| ✦ பிற்பகல் | 2.00 மணி | அமைதி நேரம் |
| ✦ பிற்பகல் | 2.30 மணி | பரிசுத்த ஆவியரும் சமூக நீதிக்கான தாகமும் |
| ✦ பிற்பகல் | 3.30 மணி | தேநீர் இடைவேளை |
| ✦ மாலை | 4.00 மணி | நற்செய்திக் கூட்டம் |
| ✦ மாலை | 5.30 மணி | நிறைவு |

– பரிபாலன சபை.

(45249)(24-11-45)

---

## பரிபாலன சபை பொதுக்கூட்டம்

தென்மராட்சி,மே13 சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம பிற்பகல் 2.30மணிக்கு ஆலய மணடபத்தில் நடைபெறும்.

சபைத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சபைச் செயலாளர் அறிவித துள்ளார். (த-119)

## சான்றிதழைப் பெற்றுக்கொள்க

தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் பிரிவினரால் கடந்த வருடம் கொடிகாமத்தில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட பயிலுநர்களுக்கான சானறிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில கலந்துகொண்ட பயிலுநர் தமது சான்றிதழைப் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாமமென பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன அறிவித்துள்ளார். (த-117)

---

## இவரைக் காணவில்லை

நாவற்காடு, வரணியைச் சேர்ந்த
**பரராஜசிங்கம் இலட்சுமிப்பிள்ளை (பராசக்தி)**
என்னும் 52 வயதான இவரைக் காணவில்லை. கடந்த ஒரு மாதமாக இவரைத் தேடுகின்றோம் காணமுடியவில்லை. உங்களது ஒரே மகன் உங்களைக் காணாது ஏக்கத்துடன் கவலையில் ஆழ்ந்துள்ளார். தயவு செய்து இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தாருங்கள்

**திரு.பரராஜசிங்கம் பரமேஸ்வரன் (கண்ணன்)**
169, உக்குளான் குளம், வவுனியா
T.P. 024 222 3312

(45268)(21-11-45)

---

## வடக்குக் கிழக்கு மாகாண ஒப்பந்த (பகுதிநேர) ஆங்கில ஆசிரியர் சங்கம்

## நிரந்தர உறுப்புரிமை

இதுவரை வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து எமது சங்கத்தில் இணைவதற்கு பெயர் விவரம் தந்தோரின் வேண்டுகோளுக்கு அமைய நிரந்தர உறுப்புரிமைப் படிவங்கள் நேரில் வழங்கப்பட்டு வருகின்றன. எமது சங்கம் கடந்த மூன்றாண்டுகள் அயராது உழைத்ததன் அறுவடைக்காலம் அண்மித்து விட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். விரைவில் வெளிவரப்போகும் நிரந்தர நியமனப் பட்டியலில் எமது சங்க நிரந்தர உறுப்பினர்களின் பெயர்கள் தவறவிடப்படுமாயின் எட்டு மாவட்டங்களையும் இணைத்து துரித நடவடிக்கை மேற்கொள்ள உள்ளோம். நிரந்தர நியமனப் பட்டியல் வெளிவர முன்னர் பதிவுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். தகுதியுள்ள அனைவரிற்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை சங்கம் தொடர்ந்தும் இயங்கும்.

சனி, ஞாயிறு நாள்களில் பிற்பகல் 2 மணிமுதல் 5 மணிவரை பணிமனை செயற்படும். நேரில் சமுகம் தரவும்.

**வடமாகாணத்திற்கான தொடர்பு முகவரி:**
தலைவர் சி.ஞானாகரன்
ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் சங்கம்
வடக்கு -கிழக்கு மாகாணம் (NEP)
இல.60, சிறீராம்ஸ் தொழிற்சாலை ஒழுங்கை [கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அருகில்]
கோப்பாய் தெற்கு. H.P. 077-6114068

(45187)(21-32-11-45)

---

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1. யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. (20' 30' கணனி பயிற்சி அறை கீழ்மாடி அமைத்தல்) | 500/- | 15000/- | எம்.8 |

01. அ). மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
2. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கபட்ட கேள்வித் தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித் தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
3. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சி கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 12.05.2005ஆம் திகதியிலிருந்து 17.05.2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால்வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் வேள்விப்பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு, ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியின் 2005ஆம் ஆண்டு மே மாதம் 19' ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 06 மாதகாலத்திற்குள் அமைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களைப் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி றெ.இருதயநாதன்
வலயக்கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

(சி-42790) (42-21-11-45)

# அன்பு செய்து அருள் பெற்று அறத்துடன் நீடு வாழ்வோம்

## ஞானக்கதிர்

மக்களை மக்களாக வாழ்விப்பது அன்பும் அருளுமேயாம். நாசச் சக்திகள் தலைகாட்டாத வண்ணம் தடைசெய்து இன்பத்தை வழங்கு வது அன்பும் அருளுமேயாம்.

மக்களை நன்நெறியில் அழைத்துச்செல்வது அன்பும் அருளுமேயாம். இவ்விரு அருமைமிகு உணர்ச்சிகளை மக்கள் இழப்பராயின் நரகத் தின் நிரந்தர உரிமையாளர்களாகி விடுகின்றார்கள்.

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா நிரயம் கொள்வர்" என்று புறநானூறு பேசுகின்றது. அத்தகையரோடு இணங்கற்க என்று ஆணை யிடுகிறது.

தேவையை நிறைவு செய்து கொள்வதற் காகக் கூட இப்பண்புணர்ச்சிகளைக் கைவிடலா காது. அங்ஙனம் கைவிடுபவர்கள் அறிவுடை யவர்களல்லர் என்று தமிழ் மகள் கூறுகின் றாள்.

தலைவன் பொருள்வயிற் பிரியப்போகின் றான் என்ற செய்தியைக் கேட்ட தலைவி தோழியிடம் அறம் பேசுகின்றாள். அருளையும் அன்பையும் துறந்து பொருளீட்டுதல் தமிழ்ப் பண்பாடல்ல. அறிவுடைமையுமல்ல என்கிறாள்.

"அருளொடும் அன்பொடும் வாராப் பொரு ளாக்கம் புல்லார் புரளவிடல்"

என்பது தமிழ்மறை இதனை அறிந்தும் தலைவர் பொருள்வயின் அகலுவாராயின் அவர் அறிவுடையவரே ஆகுக. என்று இகழ்ச்சிக் குறிப்பில் பேசுகின்றாள் தலைமகள்.

"அருளுமன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோருரவோராயின்
உரவோருரவோ ராக"

என்பது பாடல் அருளும் அன்பும் தவழ்ந்த வாழ்க்கையே வாழ்க்கை என்று பேசும் தமிழ் நாகரிகத்தை என்னென்போம்!

உலகத் தொடர்பு நிறைந்த வாழ்க்கையில் எங்கும் அன்பைக் கண்டு அன்பைச் செலுத்து வது அருள் தொடர்புடையார் மாட்டு எழும் பரி வுணர்ச்சி அன்பு. ஆனால், கடவுள் காட்சியில் கலந்த வாழ்க்கையில் வேறொரு துறையாக அமைந்து விளக்கம் [illegible]ல்கிறது முழுமுதற் பொருள் உயிர்கள் மாட்[illegible] காட்டும் பரிவுணர்ச்சி அருள்.

அந்த அருளைப் பெறுவதற்காக ஆண்ட வன் பால் உயிர்கள் கொள்ளும் பரிவே அன்பு. அவ்வன்பும் அருளும் கலக்கின்ற பொழுது அறம் தோன்றுகிறது. இதனை,

"யாஅ மிரப்பவை பொருளும் பொன்னும்
போகமும் அல்ல நின்பால்"
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர் கடம்பின் ஒலிதாரோயோ"

என்று பரிபாடல் விளக்குகின்றது.

உன் தன்வார்கழற்கு அன்பு எனக்கு நிரந் தரமாய அருளாய் நின்னை ஒத்த முழுவதுமே" என்பது மணிவாசகர் மணிமொழி.

அருளின்றி அன்பில்லை, அன்பின்றி அரு ளில்லை இவ்விரண்டும் இன்றி அறம் இல்லை. எனவே அருளும் அன்பும் கொண்டு அறம் பல செய்து வாழமுயல்வோமாக!

**செல்வி சங்கீதா தவராசா**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**தரம் 12, 2006 கலைப் பிரிவு**

*மின்சார சபை மறுசீரமைப்பு:*

# ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் மின்சக்தி அமைச்சருடன் சந்திப்பு

கொழும்பு,மே13

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடனும், இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும் தனித்தனிப் பேச்சுகளை நடத்தியிருக்கின்ற னர்.

மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் அமைச்சர் பிரேமஜயந்தவை சந்தித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி நிதிகள், மின்சார சபை மறுசீரமைப்புக் குறித் தும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் மேற் கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் குறித்தும் விரி வாகக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணை யுடன் மேற்கொள்ளப்படவுள்ள மின்சாரசபை மறுசீரமைப்புக் குறித்து இங்கு முக்கியமாக ஆராயப்பட்டது. அதேசமயம் இதனை மேற்கொள் வதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் அமைச் சரிடம் வினவியிருக்கின்றனர்.

இந்த மறுசீரமைப்புக் குறித்து மின்சாரசபை தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும், வெகுவிரைவில் இதற்கு முடிவு காணப்பட்டுவிடுமென்றும் அமைச்சர் பதில ளித்தார் எனத் தெரிகின்றது.

இதேவேளை, இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கப் பிரதிநிதிகளை மின்சக்தி அமைச் சில் சந்தித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பில் தொழிற்சங்கங்களின் கருத்துகளை யும் கேட்டறிந்தனர். அவர்களின் சந்தேகங் களுக்கும் பதிலளித்துள்ளனர்.

(க-8)

# குமுதினிப் படுகொலை தினத்தை நெடுந்தீவில் அனுஷ்டிக்க ஏற்பாடு

நல்லூர்,மே13

குமுதினிப் படகுப் படுகொலையின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் நெடுந்தீவில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை உணர்வுபூர்வ மாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நினைவு தினத்தில் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தவுள்ளனர்.

1985ஆம் ஆண்டு நெடுந்தீவில் இருந்து காலை 7 மணியளவில் குறிகாட்டுவான் நோக்கி பயணிகளை ஏற்றிவந்த குமுதினிப் படகை நயினாதீவில் இருந்து படகில் வந்த கடற்படை யினர் வழிமறித்தனர்.

அந்தப் படகில் இருந்தது அப்பாவிப் பொது மக்கள் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் கடற்படையினர் அந்த மக்களை கத்திகள், கோடரிகளால் படுகொலை செய்தனர்.

சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள் உட் பட ஏராளமான பொதுமக்கள் அந்தச் சம்பவத் தில் பலியாகினர்.

அதன் நினைவுதினமே நாளைமறுதினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

(த-13-111)

# நெடுந்தீவில் வறிய மாணவருக்கு கனடா மாணவர் மன்றம் உதவி

நெடுந்தீவுப் பாடசாலைகளின் கனடா பழைய மாணவர் மன்றம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் 25 பேருக்கு கல்வி வளர்ச்சிக் காக மாதாந்தம் ஒவ்வொருவருக்கும் தலா 700 ரூபா வீதம் வழங்[illegible]கிறது.

மேற்படி மன்றத்தின் நெடுந்தீவுக் கிளை யினால் தெரிவுசெய்யப்பட்ட 25 மாணவர்களுக்கே மாதந்தோறும் இந்த நிதியை வழங்கப்படுகி றது.

கனடாவில் உள்ள நெடுந்தீவுப் பழைய மாண வர் மன்றம் இதற்கான நிதியை வழங்குகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெற் றோரையும் மாணவர்களையும் அண்மையில் கிளை உறுப்பினர்கள் வரவழைத்து இந்தக் கொடுப்பனவுகளின் ஒரு பகுதியை வழங்கினர்.


எனினும் பெற்றோர்கள் தமது பிள்ளை களுக்கு வழங்கப்படும் நிதியை அந்தந்த வகுப்புகளுக்கான ஆசிரியர்களின் பொறுப் பில் ஒப்படைத்து பிள்ளைகளுக்குத் தேவை யானவற்றை அவர்கள் மூலம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதே சிறந்தது எனக் கருத் துத் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பி மற்றும் கிளை உறுப்பினர் எஸ்.கோபாலசிங்கம், மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் உட்படப் பலர் கலந்துகொண் டனர்.


சித்திரை, வைகாசி மாதத்திற்கான கொடுப் பனவுகள் அன்றைய தினம் வழங்கப்பட்டன.

(த-111)

# தெய்வீக ஸ்தலங்களில்



நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழாவின் போது ஆறுமுகப் பெருமான் தேரில் எழுந்தருளிய காட்சி. *(படம்: அரியாலைச் செய்தியாளர்)*




மிருசுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் 1,008 கலச அபிசேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

1,008 செப்புக் கலசங்கள் வைத்துக் கந்தப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகள், பூசைகள் செய்யப்படுவதைப் படத்தில் காணலாம். (203)



அகில இலங்கை திருமுறை மன்றத்திற்கு தமிழகத்து திருவாவடுதுறை ஆதீனம் சமயகுரவர் நால்வர்களதும் திருவுருவச் சிலைகளை அன்பளிப்புச் செய்திருந்தது.

நால்வரது திருவுருவச் சிலைகளும் சிற்பாலயத்தில் வைத்து திருக்கண் திறக்கப்பெற்று பீடத்தில் ஸ்தாபிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (203)



குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு திருப்பலி நிறைவின் பின்னர் உயிர்நீத்த யேசுவை ஆலயத்தின் வெளிப்பகுதிக்கு வீதி உலாவில் எடுத்துவருவதைப் படத்தில் காணலாம். *(படம் : குருநகர்ச் செய்தியாளர்)*

லெப்.கேணல் நவம் அறிவுக்கூட போராளிக்கலைஞனும் தமிழீழ நுண்கலைக்கல்லூரி, இசைக்கலைமணி **திரு.க.கண்ணதாசன்** அவர்களின் மிருதங்க மாணவனுமான **திரு. இ.இதயராஜ்** அவர்களின்



## மிருதங்க அரங்கேற்றம்

### நிகழ்ச்சி நிரல்

தலைமை: **திரு.கலைக்கோன்** அவர்கள்
(பணிப்பாளர், லெப்.கேணல் நவம் அறிவுக்கூடம்)
ஆசியுரை: **இசைவாணர் கண்ணன்** அவர்கள்
மதிப்பீட்டுரை: சங்கீத வித்துவான் **பொன் ஸ்ரீ வாமதேவன்** அவர்கள்
வாழ்த்துரைகள்: **திரு.புதுவை இரத்தினதுரை**
(பொறுப்பாளர், கலைபண்பாட்டுக்கழகம்)
செல்வி **தமிழினி** (பொறுப்பாளர், மகளிர் அரசியல்துறை)

**அணிசெய் கலைஞர்கள்**
பாட்டு : இசைக்கலைமாணி **திரு.த. றொபேட்**
வயலின்: இசைக்கலைமணி **திரு.சு.கோபிதாஸ்** (இசைஞன்)
மிருதங்கம்: **திரு. இ. இதயராஜ்**
கெஞ்சிரா: வித்துவான் **திரு. இரா. சிவராமன்**
கடம்: வித்துவான் **திரு.சதா. வேல்மாறன்**
முகர்சிங்: கலாவித்தகர் **திரு. ந. சதீஸ்குமார்**

இடம்: **லெப்.கேணல் நவம் அறிவுக்கூடக் கலையரங்கம்**
காலம்: **15-05-2005 மாலை 3 மணி**
ஒன்றுகூடும் இடம்:
**கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்**



தங்களை வருக வருக
என அன்புடன் அழைக்கின்றோம்
லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தினர்.

(45299) (50-14)



### தேவை

போன் சொப்பில் வேலை செய்வதற்கு
1. விற்பனையாளர்
2. உதவியாளர்

மற்றும் ஹோட்டலில் வேலைசெய்வதற்கு
1. சப்பிளையர்
2. பார்சல் கட்டுபவர்
3. றொட்டி மேக்கர் ஆகியோர் தேவை.

தொடர்பு: **இல.10, யாழ்.போன் சொப், நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

(சி-42795) (24-15-34)


## மானிப்பாய் பிரதேச சபைக்கு டிராக்டர் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,மே13

மானிப்பாய் பிரதேச சபைக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் ஊடாக 'டிராக்டர்' ஒன்று பெற்றுக்கொடுக்கப்படவிருப்பதாக வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

நவாலி, கட்டுடை, காக்கைதீவு, சாந்தை பகுதி மக்களின் குடிதண்ணீர் தேவையை நிறைவுசெய்யவும் - ஏனைய பணிகளுக்காகவும் இந்த டிராக்டர் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-185)

## கட்டாக்காலி நாய்களால் வலி.மேற்கில் தொல்லை

வலி.மேற்கு,மே13

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, கலைநகர் போன்ற இடங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லையென இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதில் வலி. மேற்குப் பிரதேச சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் எனவும் - கிராமப்புறங்களிலேயே அதிகளவு கட்டாக்காலி நாய்கள் காணப்படுகின்றன எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (த-175)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.சத்தியசாயி சேவாநிலையத்தின் ஏற்பாட்டில் இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து நான்கு தினங்களுக்கு காலை 9 மணிமுதல் யாழ்பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்திய சாயி சேவாநிலையத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பொருளியல், கணக்கியல், வர்த்தகம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விளக்கங்கள் வழங்கப்படும். (த-202)

## நல்லூர் தொகுதி ஓய்வூதியர் சங்கக் கூட்டம

யாழ்ப்பாணம்,மே13

நல்லூர் தொகுதி ஓய்வூதியர் நலன் புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலகக் கணக்காளர் எஸ். மனோகரன், வடமாநில ஓய்வூதியர் சங்க சம்மேளனத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பி.கனகசபாபதி ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-202)


### மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

இடம்: **நீர்வேலி மைதானம்**
காலம்: **15-05-2005 ஞாயிற்றுக்கிழமை**
**பிற்பகல் 2 மணி**
**- ஆவரங்கால் இளைஞர்கள் -**

(45302) (24-15-34)



### 11.05.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 1605

தொடர் இல. 200283227 இலிருந்து 200300640 வரை

**01 21 31 38** சுப்பர் எண் **01**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.36,36,600/- வெல்லப்படவில்லை

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 36,36,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 48 | 1,000/- | 4,80,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,503 | 500/- | 7,51,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,578 | 40/- | 9,03,120/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,479 | 20/- | 4,29,580/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,21,476 | 10/- | 32,14,760/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: **44,95,500/-**

300258051-9-37
300260363-6-48
300249420-4-61
300255313-6-08
300258632-8-84



### ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 - 11 - 1948



ஆண்டவன் அடியில் 24 - 04 - 2004

**அமரர் இரத்தினம் குணேந்திரன்**

(முன்னாள் முகவர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், உரிமையாளர் S.R.K மில், கல்வியங்காடு)

திதி : வளர்பிறை பஞ்சமி 13.05.2005

அன்போடு எம்மைப் பேணி ஆதரவு காட்டி
ஆளாக்கி விட்டு மீளாத் துயில் கொண்டு
ஆண்டொன்று அவரசரமாய்க் கழிந்த போதும்
ஆறிடுமா? எம் துயரம் அவனி உள்ளவரை
தீராத வேதனையில் தினம் தினம் துடிக்கின்றோம்
மாறாத சோகத்தால் மனமுடைந்து வாடுகின்றோம்
மாண்டு நீர் போனதால் மனம் ஏங்கித்துடிக்கின்றோம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்

அன்புடன் நினைவு கூரும்
அம்மா, மனைவி, மகள்,
குடும்பத்தினர்

223. கலைமகள் வீதி.
நல்லூர் வடக்கு. யாழ்ப்பாணம்.

(45297)(21-15-34)



### வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் இலகுப்பிள்ளை ஆறுமுகம்**

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

ஆசாரசீலராய் நிறைவாழ்வு வாழ்ந்து 11-04-2005ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இலகுப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நிகழும் பார்த்திப வருடம் சித்திரை 30ஆம் நாள் 13-05-2005ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பழமுதிர்சோலை,*
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*

(45300) (24-15-34)

**- குடும்பத்தினர்.**



### SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி

**SAAMSTECH இன் கீழ்வரும் பணியிடங்களுக்கான**
**பயிற்சியும் பணி நியமனமும்**

1. Academic Staffs - Department of English
2. Technical Officers - Department of Computing
3. Administrative Officers - District Offices
4. English Teachers - Schools

யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் 15 நாட்கள் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு அடுத்த 49 நாட்கள் ஆங்கிலமூலமான செயற்பாடுகளில் கற்பித்தல் நடைபெறும்.

**கல்வித்தகுதி : க.பொ.த. உயர்தரத்தில் சித்தி.**
ஆங்கிலப் பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை

**பயிற்சிக்காலம்: 3 மாதங்கள். வாரத்தில் 5 நாட்கள்**
**( தினமும் 4 மணிநேரம் )**

**கட்டணம் : ரூபா 12000/-**

(48298)

**வகுப்புகளில் 80% இற்குமதிகமான வகுப்புக்களில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் பாடநெறியின் முடிவில் அந்தந்த மாவட்டங்களிலேயே மாதம் ரூபா 6000/- உடன் பணி நியமனம்**

**முதலில் வருபவர்கள் மற்றும் தகுதி அடிப்படையில் 40 பேர் மட்டும் பாடநெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்**

**பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழுடன் 14, 15 ஆம் திகதிகளில் நேரில் வரவும்**

**SAAMSTECH**
**TEACHERS TRAINING COLLEGE**
841, HOSPITAL RD, CHUNDIKULI, JAFFNA. 021-4591571
22 - 1/4, GALLE ROAD, DEHIWALA (SOUTH). 077-3068968

# போராளிக் கலைஞனின் மிருதங்க அரங்கேற்றம்



லெப்.கேணல் நவத்தின் 16ஆம் ஆண்டு நினைவுநாளும், போராளிக் கலைஞர் இ.இதயராஜ் ஜின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நவம் அறிவுக்கூடக் கலையரங்கத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளன.

லெப். கேணல் நவம் அறிவுக்கூடப் பணிப்பாளர் கலைக்கோன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரையினை இசைவாணர் கண்ணனும், மதிப்பீட்டுரையினை சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீ வாமதேவனும் நிகழ்த்தவுள்ளனர். வாழ்த்துரைகளைக் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அணிசெய் கலைஞர்களாக பாட்டு இசைக்கலைமணி த.றொபேட், வயலின் இசைக்கலைமணி சு.கோபிதாஸ், கஞ்சிரா வித்துவான் இரா.சிவராமன், கடம் வித்துவான் சதா.வேல்மாறன், முகர்சிங் கலா வித்தகர் ந.சதீஸ்குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (த-13)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் - பரிமளம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம்-பரிமளம் அவர்கள் நேற்று (12.5.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் பொன்னம்பலம்-பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும் பொன்னையா - தங்கம்மாவின் அன்பு மருமகளும் உமாதேவி, சிவபாதம் (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் இராஜேஸ்வரன் (கிளை மேற்பார்வையாளர், யாழ்.பல.நோ.கூ.சங்கம்) ஜெயந்தினி (ஆசிரியர், புனித மரியாள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுசியா (H.N.D.A 1ஆம் வருட மாணவி) அர்ஜுன் (2007 கணிதப் பிரிவு யாழ்.இந்துக் கல்லூரி), கீர்த்தனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆர்த்திகன், பிருந்துவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2005) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
*சிவகுரு வீதி,* சு.சிவபாதம் (மகன்)
*கொக்குவில் மேற்கு.* (45314) (12-17) இ.இராஜேஸ்வரன் (மருமகன்)

## கேள்வி அறிவித்தல்

**அரசாங்க அதிபர் அலுவலகம்,**
**கச்சேரி, யாழ்ப்பாணம்**

1) கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண கட்டடங்கள் திணைக்கள (மா) பிரதம பொறியியலாளரினால் 01.06.2005 புதன்கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

2) நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள, ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோர் ஆவார்.

3) ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட செய்யப்படுகின்ற வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை மாகாணக் கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப்பெற்று கேள்விப் பத்திரங்களை 27.05.2005 அன்று 3.00 மணிவரை நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத (கேள்விப் பணம்) | I.C.T.A.D பதிவுத்தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1) கைதடி முதியோர் இல்ல அபிவிருத்தி வேலைகள். | 750/= | M-9 | 20, 000/= |
| 2) கைதடி சிறுவர் இல்லத்தில் களஞ்சியமும், மண்டபம் மற்றும் மதில் நிர்மாணித்தல் | 750/= | M-9 | 17, 000/= |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மா) எந்திரி.க.குகநேசன்
யாழ்ப்பாணம். பிரதம பொறியியலாளர்
13.05.2005 (C-42801) (12-17) கட்டடங்கள் திணைக்களம் (மா)

## பணியாளர்கள் தேவை

1) அனுபவம்மிக்க அச்சுஇயந்திர இயக்குநர்களும் (MACHINE MINDERS) அச்சுயந்திர உதவியாளர்களும் (MACHINE HELPERS) தேவை.
2) பயிலுநர்களும் பணிக்குச் சேர்க்கப்படுவர்.
3) இயந்திரத்தின் மூலம் கடதாசி வெட்டுவதில் (PAPER CUTTERS) தேர்ச்சி பெற்றவர்கள் தேவை.

அனுபவம் மற்றும் ஏனைய தகமைகள் தொடர்பான சான்றிதழ்களுடன் நேரில்வரவும்.

*உதயன் மனிதவள சேவை*
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C-42799) (12-17)


## மக்களின் வசதி கருதி

**Aero Lanka ஏறோலங்கா**

கொழும்பு - யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் - கொழும்பு
யாழ்ப்பாணம் - திருகோணமலை

*விமான ரிக்கெற்றுக்களை பெற்றுக்கொள்ளலாம்*

ராஜா தியேட்டர்,
ராஜா கொமினிக்கேசன்
205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 6825, 222 2318, 222 7332, 222 7334
(C-42803) (12-17)


## மரண அறிவித்தல்



**Dr.திருமதி வாசுகி தயாளன் (D.A.M)**

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr.திருமதி வாசுகி தயாளன் (D.A.M) அவர்கள் (11.05.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் கனகசபாபதி - செல்வமலர் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அமரர்கள் வேலாயுதம், அரியமலர் ஆகியோரின் மருமகளும் தயாளன் (கணக்காய்வாளர், மாகாண கணக்காய்வு திணைக்களம், யாழ்ப்பாணம்) பாசமிகு துணைவியாரும் யாதவன் (பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), கஸ்தூரி (சுண்டிக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜானகி (புருணே) அன்புச் சகோதரியும் - குணளன் (சுவிஸ்), சிராளன் (ஜேர்மனி), நளினி (அமெரிக்கா), பாராளன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), அருள்ஞானப்பிரகாசம் (புருணே) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 12.05.2005 நடைபெற்று பூதவுடல் ஊரியான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துவாரகை*
*கைதடி மேற்கு,* தகவல்:
*கைதடி.* (45317) வே.தயாளன் (கணவன்)

## பெயின்ரர் தேவை

வீட்டிற்கு பெயின்ற் பூசக்கூடிய அனுபவமுள்ளவர் நிரந்தரமாகத் தேவை. சம்பள விவரம் நேரடியாக பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2829, 021 222 5595
(45304) (12-17)


**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன் (ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
விரைவில் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அறிந்தும் அறியாமலும்
(C-41381)(12-17)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.



செவ்வேல் (ரீலஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
காட்சி நேரம்: 10.30a.m., 2.30.p.m., 6.30p.m., 9.30 p.m.
(C/42294)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



சந்திரமுகி (ரீலஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 10.00. (பு.நே.)


# ஈழத்துக் கலைஞரின் பாடல்கள் ஒலிபரப்பு



யாழ்ப்பாணம்,மே13

தேவார இசைமணி தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பாடிய பண்ணிசைப் பாடல்கள் அகில இந்தியச் திருச்சி வானொலியில் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.10 (இந்திய நேரம்) பக்தி மாலை நிகழ்வில் ஒலிபரப்பாகவுள்ளது.

## மாகாண மட்ட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள்

*கிரகித்தல்*
**திரு.மகாலிங்க சிவம் B.A. (Hons)**
*பொதுஉளசார்பு*
**திரு.தவசேகர் B.Sc, P.G.D.E**

D.M.I யாழ்.நகர் சனி 2.30 - 6.00, ஞாயிறு 10.00 - 1.00
கிறிஸ்ரல் நெல்லியடி - வெள்ளி, 4- 6, ஞாயிறு 2 - 6
சுப்றா சித்தன்கேணி - சனி, செவ்., புதன் 6.30 - 8.30 (மாலை)
(45308) (12-17)

## 31 ஆம் நாள் நினைவலையுடன் நன்றி நவிலலும்



அமரர்
**நகுலேந்திரன் (இந்திரன்) சுபாசினி (பபி)**

நாளை (14.05.2005) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்நது நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

என்றும் அன்புடன்
*பங்களா வீதி,* ந.நகுலேந்திரன (இந்திரன்) கணவன்.
*சாவகச்சேரி வடக்கு, மீசாலை.* ந.ஸ்ரீஇந்திரஜீத் (அஜித்) மகன்.
(45307) (12-17)

## கண்ணீர் அஞ்சலி



எமது சனசமூக நிலையத் தலைவர்
**திரு.வே.தயாளன்** அவர்களின்
அன்புத் துணைவியார்
**Dr. திருமதி வாசுகி தயாளன்**
அவர்கள் 11.05.2005 புதன்கிழமை காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கைதடி மேற்கு,* கைதடி மேற்கு சனசமூக நிலையம்,
*கைதடி.* (45311) (12-17) குமரன் விளையாட்டுக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரிய நண்பரான **திரு.சு.சிவபாதம்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சுப்பிரமணியம் பரிமளம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்
ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி** (45306) (12-17) ஆளணியினர்.

குருஜி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் 49 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு அருட்கவி சீ.விநாசித்தம்பி எழுதிய கவிதை

## மலரிட்டுப் போற்றுவோமே



வளஞ்செழித்த தமிழகத்துக் கும்பகோணம்
மன்னு வெங்கட ரத்தினம்விசா லாட்சி செய்த
உளஞ்செழித்த தவத்தினால் உதித்த மைந்தன்
ஓங்கு ரவிசங்கர்ஜி என்னும் செல்வன்
இளம்பிறையான் கருணையினால் இளமைதொட்டே
இதயத்தில் அருளொளியைக் கண்டு. ஜோதி
விளங்குகின்ற அன்படக்கம், யாண்டும் ஈசன்
மேவுகின்ற விதந்தெளிந்தார், தவமேற்கொண்டார்

சமுதாயம் ஆன்ம ஈடேற்றம் பூண
சாந்திதரும் கல்வியுடன் தரும சாலை
நமனைவெல்லத் தகுமான்ம தியானபீடம்
நாடெல்லாம் அறம்பேணும் சமூகவாழ்வின்
அமைவான சொற்பொழிவு பலவுமாற்றி
அன்பினால் இன்பநெறி வளர்த்த செம்மல்
உமைபாகற் கிசைந்த ஆ திரை நன்னாளில்
ஓங்கார ஜோதிக்குள் அடக்கமானார்

பரமபூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஜிப்
பாரெல்லாம் போற்றுகின்ற பேரார்வள்ளல்
மருவு நாற் பத்தொன்பான் ஜெயந்தி நாளில்
மகான் தன்னைப் பூசித்து ஜீவசாந்தி
அருள்பெறுவோம் அவர் புகன்ற அடிச்சுவட்டை
அவனியெலாம் பரப்பிடுவோம், சைவமக்கள்
கருணைபுரி அவரடியைப் பாடி ஏத்தி
களபநீர் மலரிட்டுப் போற்றுவோமே.

அருட்கவி
**சீ.விநாசித்தம்பி** (M.A.)

**இன்று நடைபெறும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் 49 ஆவது ஜெயந்திவிழாவிற்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.**

**இடம்:** வீரசிங்கம் மண்டபம்
**காலம்:** 4.00-6.30 p.m.

(45301) (12-17)



நேற்று யாழ்.வருகைதந்த நோர்வேத் தூது வர் தும்பளையில் உள்ள படகு திருத்தும் தொழிற்சாலையில் கடற்புலிகளின் உறுப்பினர் களுடனும் தொழிற்சாலை அமைப்பாளருடனும் இணைந்து எடுத்துக்கொண்ட படம்.

## அரசின் உத்தியோகபூர்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தை கைச் சாத்திடுவதற்கான சுபநேரத்தை அரசு கணித்து வைத்துள்ளதாக அரச உயர்மட்ட வட்டாரங் கள் தெரிவித்தன.

இதேவேளை, உதவி வழங்கும் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், அந்தக்காலப்பகுதிக்குள் பொதுக்கட்டமைப்பை அரசு ஏற்படுத்துவதற்கான சாத்தியம் இருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தம் கைச் சாத்திடப்படும் சூழ்நிலையில் நாட்டில் அமைதி யின்மை ஏற்படுமாயின் அதனைத் தடுக்க நாட ளாவிய ரீதியில் அவசரகாலச்சட்டத்தைக் கொண்டு வந்து ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிப்பது குறித் தும் அரச உயர்மட்டம் ஆராய்ந்திருப்பதாகத் தெரி யவருகிறது.

இதற்கிடையே, மேற்படி மாநாடு நடைபெறும் பகுதியைப் பாதுகாப்பு வலயமாக மாற்றுமாறு அரச உயர்மட்டப் பணிப்புரையொன்று பாது காப்புத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-க)

## பொதுக்கட்டமைப்புக் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கிளிநொச்சியில் செய்தியாளர் ஒரு வருக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இந்த விசேட பேட்டியில் அவர் தெரிவித்த முக்கிய அம் சங்கள் வருமாறு:-

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் அந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உரிய பங்களிப்பு வழங்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதி யாக இருக்கின்றோம்.

முதலில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி ஓர் உறுதியான பதிலை எங்களுக் குத் தரவேண்டும். அரசின் தெளிவான நிலைப் பாடு பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

அப்படிச் செய்யப்பட்டால் முஸ்லிம் தரப்போடு நாம் நேரடியாகப் பேசுவோம். அவர்களோடு உரையாடி அவர்களுக்கு உள்ள சந்தேகங்களை நீக்கி, இந்தப் பணியை இணைந்து முன்னெடுக் கும் சுமுக நிலையை ஏற்படுத்தமுடியும் என நம்புகிறோம். அதைச் செய்வதற்கு, முதலில் இது விடயத்தில் ஜனாதிபதியின் முடிவு எமக்குத் தெரியவேண்டும் - என்றார் தமிழ்ச்செல்வன்.

பொதுக்கட்டமைப்புக்கான உடன்பாடு எப் போது கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கிறீர் கள்? - என்றொரு கேள்வி இப்பேட்டியின்போது அவரிடம் எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் சமர்ப்பித்த யோசனையை நாம் ஒப்புக்கொண்ட நாளில் இருந்தே அந்த உடன் பாட்டில் ஒப்பமிடுவதற்குத் தயாராக ஒவ்வொரு நாளையும் எண்ணி, எண்ணிக் காத்திருக்கின் றோம். ஆனால், அரசுதான் இன்னும் இறங்கி முன்வரவில்லை. அரசுத் தரப்பு, சர்ச்சைக் குரி யது என்றுதான் குறிப்பிட்டுப் பிரச்சினை எழுப் பிய விடயங்களில் இணக்கத்துக்கு வருமானால் அடுத்தகணமே உடன்பாட்டில் ஒப்பமிடமுடி யும் - என்றார் தமிழ்ச்செல்வன். (எ-க)

## ஹக்கீமுடன் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலே முஸ்லிம்களின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லையென்று கூறியிருக்கிறார்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியுடன் பேசிய போதும் திருப்தி ஏற்படவில்லையென்றும், இந்த விடயத்தில் முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டுவிட்ட னர் என ஹக்கீம் அகாஷியிடம் சுட்டிக்காட்டியுள் ளார். (எ-க)

## இணக்கம் காணப்படாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தல், கடற்கரையோரக் கட்டுமானம் போன்ற விடயங்களில் இன்னும் உடன்பாடு எட்டப்பட வில்லை.

மாவட்ட ரீதியில் மீள்கட்டமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்யும் குழுக்களை நியமித்தல், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் போன்ற விட யங்களும் இன்னும் தீர்க்கப்படாமல் சர்ச்சை யில் உள்ளன. இந்த நிலையில், பொதுக்கட்ட மைப்பு அவசர அவசரமாக ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

இணக்கம் காணப்படாமல் இழுபறி நிலை யில் அரசினால் கைவிடப்பட்டிருக்கும் விடயங் கள் குறித்துத் தீர்க்கமான ஒரு முடிவு எடுத்தபின் னரே பொதுக்கட்டமைப்பு உருவாகும் சாத்திய முண்டு.

அவ்வாறு எல்லா விடயங்களிலும் இணக்க நிலை வருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என் பதை எம்மால் கூறமுடியாது. நாம் கட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால், முடிவுகளை எடுப் பதில் அரசு காட்டும் மெத்தனமே இது காலதாம தமாவதற்குக் காரணம். அரசு தனது முடிவு களை உடனுக்குடன் எடுத்து, அவற்றை நடை முறைப்படுத்த இணங்குமானால், பொதுக்கட் டமைப்பை உருவாக்குவது சாத்தியமாகும்.

- இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரி வித்தன. (எ-க)

## இருபதாயிரம் கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், சர்வதேச உதவிவழங்கும் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். அதேபோல் பிரதமர், அமைச் சர்மார், அரச அதிகாரிகள், தனியார்துறை முக் கியஸ்தர்கள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற மற்றும் சிவில் சமூகத்தின் பிரதி நிதிகள் எனப் பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமானச் செயற்பாடுகள் மற்றும் நடுத்தர அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன குறித்து இங்கு முக்கிய கவனஞ் செலுத்தப்படவுள்ளது. 2005ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி இலக்குகள் குறித்தான அறிக்கையும் இங்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. (எ-க)

# திருக்கேதீஸ்வரத்தில் கொடியேற்றம்

திருக்கேதீஸ்வரம் அருள்மிகு கௌரி உட னுறை திருக்கேதீச்சர நாதர் ஆலய பெரும் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.24 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பெரும் திருவிழாவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாடு, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, திருமண் எடுத் தல், அங்குரார்ப்பணம், ஆசாரியா இரட்சாபந் தனம் அதனைத் தொடர்ந்து அதிவாசக் கிரியை கள் என்பன நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(எ-203)

## நல்லூரில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார் ஆகி யோர் மகஜர்களைக் கையளித்தனர்.

(எ-7-13-15-51-86-111)

## ஈ.பி.டி.பி வாகனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று திரும்பும் வழியிலேயே இந்தத் தாக்கு தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் ஈ.பி.டி.பியினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும், அவர்கள் பயணம் செய்த இரண்டு வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. (எ-க-12)

## நோர்வே தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் யாழ். மாவட்டத் தலைவர் அறிபெக்கா வைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது குடாநாட்டின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக அவர் கண்காணிப் புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவரிடம் கேட்டறிந்துகொண்டார்.

சுமார் ஒருமணிநேரம்வரை இச்சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பை முடித்துக்கொண்டு, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பருத்தித் துறை மற்றும் முனைப் பகுதிக்குச் சென்ற நோர் வேத்தூதர் அங்குள்ள மக்களுடன் கலந்துரை யாடினார்.

அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு நடவடிக்கைகளையும் அவர் பார்வையிட்டார்.

நேற்றுமாலை கிளிநொச்சி சென்றடைந்த தூதர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆழிய வளை மற்றும் முல்லைத்தீவு நகருக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாட வுள்ளதுடன், அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட விருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(எ-7-70)

## தமிழ்ச்செல்வனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணியில் கொழும்புக்கான நோர்வேத் தூதவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுத் திடீரென கிளி நொச்சிக்கு விரைந்தார். இன்று காலை அவர் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் பேச்சுகளை நடத்தவிருக்கின்றார்.

நேற்று இரத்மலானையிலிருந்து விமானத் தில் பலாலி சென்ற அவர், மாலையில் கிளி நொச்சியை சென்றடைந்தார். இன்று காலை அவர் தமிழ்ச்செல்வனோடு பேச்சுகளில் ஈடு படுவார். பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை உருவாக்குவதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடு களில் ஈடுபடவே நோர்வேத் தூதுவர் திடீரென கிளிநொச்சி விரைந்தார் என ஒரு தகவல் தெரிவித்தது. (எ-க)

## ஜப்பானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி யிடம் ஜே.வி.பி.தலைவர்கள் உறுதியாகத் தெரி வித்துவிட்டனர்.

கொழும்புக்கு வந்திருக்கும் யசூசி அகாஷி நேற்றுக்காலை நுகேகொடவிலுள்ள ஜே.வி.பி யின் அரசியல் அலுவலகத்தில் ஜே.வி.பி. தலை வர் சோமவன்ஸ் அமரசிங்க, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரைச் சந்தித்தார். இரண்டு மணி நேரம் இருதரப்பினரும் பேச்சு நடத்தினர்.

பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி.ஏற்காது. தனிநாட்டுக்கு வழிவகுக்கும் இந்த யோசனை இந்தப் பிராந்தியத்துக்கே அச்சுறுத்தலாகும். இந்த விடயத்தில் அரசுக்கு அழுத்தம் வழங்கும் சர்வ தேச சமூகம் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்கு மாறு முதலில் புலிகளுக்கு அழுத்தத்தை வழங்க வேண்டும். இவ்வாறு ஜே.வி.பி.தலைவர்கள் அகாஷியிடம் முகத்தில் அடித்தாற்போல் கூறி னார்கள் என்று தெரியவருகின்றது. (எ-க)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
G.A.Q., B.A., 1st in com, B.com.
2005, 2006 (கல்வியாண்டு)
G.A.Q. English (E.S.L.) Paper - Class
50 hours
B.A. Part - I Paper Class
ஆரம்பம் - 14.05.05 சனி காலை - 8மணி
D.C.S. (நியூட்டன்) ஆரியகுளச்சந்தி அருகாமை, யாழ். நகர்.
Branch திகழ் கல்வி நிறுவனம் இணுவில்.

வணிகக் கல்வி
நடைமுறை விடயக் கருத்தரங்கு - 2005
200 இற்கு மேற்பட்ட நடைமுறை விடய வினாக்களின் அலசல்
BY: S.யசோ
காலம்:16.05.2005
Sun - 8 - 2 (SLT) விக்னா, 3 - 6 (SLT) நிரு
NOTE: வெளிமாணவர்களும் கலந்துகொள்ளமுடியும்
(45277) (12-34)

தமிழ்
Mr.சுரேஸ்
(B.A.Hons Tal-Spl.)
2006-ஈழத்திலக்கிய வரலாறு
D.C.S - நியூட்டன், ஆரியகுளம் சந்தி, யாழ்.நகர்.

புவியியல் - S.கிருஸ்ணா
2006, 2007 பிரிவுக்காய
★ செம்முறைப் புவியியல்
★ பௌதிகப் புவியியல்
★ மானிடப் புவியியல்
ஒரு வருட காலத்திற்குள் புவியியல் முழுப்பாடத்திட்டமும் நிறைவுசெய்யப்படும்.
ஆரம்பம்:14.05.05 சனி 11 மணி
D.C.S - நியூட்டன், ஆரியகுளம் சந்தி, யாழ்.நகர்.

கருத்தரங்கு-I
★ஆசிரிய போட்டிப் பரீட்சைக்கானது
★நடந்து முடிந்த வினா விடைகளுடன் கையேடுகள் வழங்கப்படும்.
BRIGHTMAN -
(14/05) நாவலர் வீதி
Sat. 3 p.m. - 5 p.m.
யூனிவேர்சல்
(15/05) அரசடி வீதி
Sun. 7 p.m. - 10 p.m.
★பதிவுகள் இடம் பெறுகின்றன.
★வேறு எங்கும் நடைபெறாது

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்.நகர்.
புதிய பிரிவுகள்
3 மாத காலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
By: லீலாகிருஷ்ணன் ஆரம்பம்: 14.05.2005 Sat. 2.30 P.M
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By: NIMALAN ஆரம்பம்: 14.05.2005 Sat. 4.30P.M
வேலை செய்வோர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட வகுப்பு
3 மாத காலத்தில் சகலதும் பூர்த்தி செய்யப்படும். (45282) (12-34)

பொருளியல் கருத்தரங்கு
A/L 2005
பிறைற்றின் கல்வி நிலையம்
சாவகச்சேரி
K-உதயன்
16.05.2005 திங்கள் 8 A.M - 5 P.M
பகுதி I "அ" "ஆ" பகுதி
19.05.2005 வியாழன் 8 A.M - 5 P.M
பகுதி II "அ" "ஆ" பகுதி
200 M.C.Q வினாக்கள் மீட்கப்படும்.
▲அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(45315) (12-34)

IIS
கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
14.05.2005
16.05.2005
பகல் 10 மணி
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன என் பதை அறியத்தருகின்றோம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-42735)(12-34)

புதிய கணினிப் பயிற்சி நெறிகள்
பதிவுக் கட்டணம் முற்றிலும் இலவசம்
New Batches Start On : - 18.05.2005 - 21.05.2005
Diploma in Microsoft Office 2003
Diploma in Desk Top Publishing
Diploma in Internet Technology
Diploma in Video Mixing
Diploma in Accounting Package
Diploma in Hardware Engineering
Diploma in Computer Programming
3-5 Months
(C-42794) (12-34)
மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 151200


## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சத்தியமூர்த்தி

A.G.A ஒழுங்கை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சோம சுந்தரம் சத்திய மூர்த்தி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் சோமசுந்தரம் - ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கோபாலசாமி தேவகுஞ்சரம் தம் பதிகளின் மருமகனும், லலிதாரமணியின் அன்புக் கணவரும் தமிழினி, அனுசா, நித்தியா, ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2005) வெள் ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வை ஊறணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.சற்குணபாலன் (மைத்துனர்)
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

(C-42804) (12- 34)




EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.